சிலுவைச் சம்பவத்திற்குச் சற்றுச் சற்றாக நெருங்கும்போது, கிறிஸ்துவின் தாழ்மை மேலும் மேலும் வெளிப்படுகின்றதை நாம் காண்கிறோம். பிடிக்கப்பட்டு சநெகெதிரின் முன்னிலையில் நிறுத்தப்பட்டபோது, பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு எதிராக தன்னைப் பாதுகாக்க இயேசுவுக்கு முழு உரிமை இருந்தது. அவர் விரும்பினால் மிரட்டியிருக்கலாம், தீர்ப்பை அழைத்திருக்கலாம், அல்லது ஒரு கணத்தில் மனிதகுலத்தையே அழித்திருக்கலாம். ஆனாலும், இயேசு மௌனத்தின் பாதையைத் தேர்ந்தெடுத்தார் (வச. 63).

மௌனம். அறுக்கப்படுவதற்குக் கொண்டு செல்லப்படும் ஆட்டுக்குட்டியைப் போல. தன்னை நிரூபிக்க அவர் எதுவும் பேசவில்லை நிகழ்வை மாற்றுவதற்காக எதையும் செய்யவில்லை. ஏன்? ஏனெனில் கிறிஸ்து ஏற்கனவே தமது உயிரை பிதாவின் கைகளில் ஒப்படைத்திருந்தார்: “என் சித்தமல்ல, உமது சித்தமே நடக்கட்டும்” (லூக் 22:42). பிதாவின் சித்தம் மனிதரின் பாவங்களுக்காக அவர் மரிக்க வேண்டும் என்பதுதான். ஆகையால், தன் முன்னிலையில் கொடூரமான சிலுவை மட்டுமே இருந்தபோதும், கிறிஸ்து மௌனமாக நின்றார். ஆனால் இந்த தாழ்மையின் பாதை மகிமையின் பாதையாக மாறும் என்று யார் அறிந்திருப்பார்கள்?

அப்போஸ்தலர் பவுல் இதை அழகாக விளக்குகிறார்: “ஐஇயேசுஸ மரணம் வரைக்கும் , சிலுவையில் மரிக்கும் வரைக்கும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாழ்த்திக்கொண்டார்! ஆகையால், தேவன் அவரை மிக உயர்ந்த இடத்தில் உயர்த்தி, எல்லா நாமங்களுக்கும் மேலான நாமத்தை அவருக்குக் கொடுத்தார்” (பிலிப்பியர் 2:8–9).

எவ்வளவு மகத்தான இரகசியம்! கிறிஸ்துவின் தாழ்த்தப்படுதல் அவருடைய உயர்த்தப்படுதலாக மாறியது. அவரது தாழ்மையே கடைசி சத்துருவான மரணத்தின் பெருமையை வென்றது. இதனால் நாம் மகிழ்கிறோம் ஏனெனில் நம்முடைய மகா ராஜா தம்மைத் தாழ்த்தி நம்மைப்போல ஆனார், நாம் அவரைப்போல ஆகும்படி. காலத்தின் முடிவில், இந்த மௌனம் முறியடிக்கப்பட்டு, பரலோகம் அறிவிக்கும்: “இந்த உலகத்தின் ராஜ்யம் நம்முடைய ஆண்டவரின் மற்றும் அவருடைய கிறிஸ்துவின் ராஜ்யமாகி விட்டது அவர் என்றென்றும் ஆட்சி செய்வார்” (வெளிப்பாடு 11:15). அந்த நாள்வரை, நாம் தாழ்மையான இருதயங்களுடன் காத்திருக்கிறோம்.

## *இன்றைய ஜெபம்*

1. தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழும்போது, நாம் மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் என்று எண்ணாமல் இருக்க உதவி செய்யும். ஆட்டுக்குட்டியைப் போல அமைதியாக இருந்த இயேசுவைப் போல, நாமும் தேவனுடைய சித்தத்தைச் செய்ய விரும்பும் மனதை தரும்.

2. தாழ்மை என்பது தன்னைக் குறைத்துக் காண்பது அல்ல. பிறரின் தேவைகளை முன்னிலைப்படுத்த உதவி செய்யும். எங்கள் எல்லா உரையாடல்களிலும் ஆண்டவர் அமைதியாகக் கேட்கிறார் என்பதை நினைவில் கொள்ள உதவி செய்யும்.

3. வாழ்வுக் கட்டணம் அதிகரித்து வரும் இந்த காலத்தில் மக்களுக்கு உதவும் அரசாங்கத் திட்டங்கள் உண்மையாக பயன் அளிக்கட்டும். குறிப்பாக B40 மற்றும் M40 மக்களுக்கு உதவ ஞானமும் சரியான நடைமுறைகளும் இருக்கப் ஜெபிக்கிறோம்.

*"மலேசியாவில் "B40" என்பது குறைந்த வருமானம் பெறும் கீழேயுள்ள 40% மக்களை குறிக்கிறது. இதேபோல், "M40" என்பது (நடுத்தர 40% மக்களையும்) & "T20" என்பது (அதிக வருமானம் பெறும் 20% மக்களையும்) குறிக்கும் ஒரு பிரிவாகும்.*



# தாழ்மையின் பண்புகள்

## வாரம் 2

# *அகந்தையின் வேர்களை ஆராய்தல்*

“தேவன் அகந்தையுள்ளவர்களுக்கு எதிராக நிற்கிறார் தாழ்மையானவர்களுக்கு கிருபை அளிக்கிறார்.” (யாக்கோபு 4:6)

நாம் ஜெபமும் உபவாசமும் மேற்கொள்ளும் இரண்டாம் வாரத்திற்குள் நுழையும்போது, தாழ்மையின் பண்புகளின் மீது நம் கவனத்தை திருப்புகிறோம். தாழ்மை என்பது வெளிப்படையான நடத்தையும் மரியாதையான பழக்கமாக மட்டும் இல்லை அது தேவனுடனும், பிறருடனும், நம்முடனும் நாம் எப்படி தொடர்பு கொள்ளுகிறோம் என்பதைக் கட்டமைக்கும் இருதயத்தின் நிலையாகும். இதற்கு எதிராக நிற்பது அகந்தை. அது மிக நுணுக்கமானதாய் இருந்தாலும் அழிவை உண்டாக்கும் கருவியாக, வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் வேரூன்றக்கூடியது.

அகந்தை பல வடிவங்களில் வெளிப்படுகிறது: ஆவிக்குறிய வாழ்க்கையில் தன்னம்பிக்கை சார்ந்த நிலை, உறவுகளில் தற்காப்பு மனப்பான்மை, சேவையில் அங்கீகாரம் பெறும் விருப்பம், திருத்தத்தை ஏற்க மறுப்பு, மேலும் தேவனைவிட நாமே சிறப்பாக அறிந்திருக்கிறோம் என்ற அமைதியான நம்பிக்கை. பல நேரங்களில், அகந்தை மதச்சார்ந்த செயல்களில், திறமையில் அல்லது நல்ல நோக்கங்களின் கீழ் மறைந்து காணப்படும். இதுவே அதை மிகவும் ஆபத்தானதாக மாற்றுகிறது.

வேதாகமம், தேவன் அகந்தையுள்ளவர்களுக்கு எதிராக நிற்கிறார் என்பதை நினைவூட்டுகிறது. இது மிகவும் விழிப்புணர்வூட்டும் உண்மை. அகந்தை நம்மை பிறரிடமிருந்து மட்டும் தூரப்படுத்துவதல்ல் அது தேவனுடன் உள்ள நம்முடைய உறவையும் பாதிக்கிறது. மறுபுறம் தாழ்மை மனந்திரும்புவதற்கான கிருபை, மாற்றமடைவதற்கான கிருபை, வளர்ச்சியடைவதற்கான வழியைத் திறக்கிறது. இந்த வாரம் பரிசுத்த ஆவியானவர் நம்மை ஆழமாக ஆராய அனுமதிக்கும்படி நம்மை அழைத்திருக்கிறார்.

நாம் உபவாசத்தை நோற்கும்போது, வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் உள்ள அகந்தையை எதிர்கொள்ள அழைக்கப்படுகிறோம். நமது தனிப்பட்ட ஆவிக்குறிய வாழ்க்கை, குடும்ப உறவுகள், தலைமைப் பொறுப்புகள், சேவைச் செயல்கள் மற்றும் பொது சாட்சி அனைத்திலும், உண்மையான தாழ்மை, எல்லாவற்றிலும் தேவனை நாம் தேவைப்படுகிறோம் என்பதை ஒப்புக்கொண்டு, நம்முடைய சுயஆட்சி உள்ள ஒவ்வொரு பகுதிகளையும் அவருக்குச் சமர்ப்பிக்கும் போது துவங்குகிறது

**சிந்தித்து பாருங்கள்:**

உங்கள் வாழ்க்கையின் எந்த பகுதிகளில் அகந்தை மெதுவாக உங்கள் மனப்பான்மையையோ செயல்களையோ பாதித்து வருகிறது?

## இன்றைய ஜெபம்

1. ஆண்டவரே, என் இருதயத்தை ஆராய்ந்து, உமது ஆட்சிக்கு எதிராக நிற்கும் எந்த அகந்தையையும் வெளிப்படுத்தும். என் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் தாழ்மையோடு நடக்க கற்றுத்தாரும். நான் உபவாசமும் ஜெபமும் செய்யும் போது, உமது கிருபையை வரவேற்கும் இருதயத்தை என்னுள் உருவாக்கும். இயேசுவின் நாமத்தில், ஆமென்.

2. ஆண்டவரே, உமது சபை தாழ்மையை அரிதான பண்பாக அல்லாமல், அடிப்படை பண்பாக ஏற்றுக்கொள்ள உதவி செய்யும். எங்களைத் தேர்ந்தெடுத்ததற்கான எல்லா மகிமையும் உமக்கே என்று உணர்ந்து உம்மிலேயே பெருமை கொள்ளச் செய்யும்.

3. 2026 ஆம் ஆண்டிற்கான பொருளாதார நிலை மிகவும் சவாலானதாக தோன்றுகின்ற நிலையில், எங்கள் தேசிய தலைமைக்கு ஞானம் தந்து, நாட்டின் வளங்களை திறம்பட வழிநடத்தவும் நிர்வகிக்கவும் உதவி செய்யும்.

# *தேவனின் மீது சார்ந்திருத்தல்*

“உன் முழு இருதயத்தோடும் கர்த்தர்மேல் நம்பிக்கை கொள் உன் சொந்த புத்தியின்மேல் சாய்ந்து கொள்ளாதே.” (நீதிமொழிகள் 3:5)

தாழ்மையின் முக்கியமான ஒரு பண்பு தேவனின் மீது சார்ந்திருப்பதாகும். அகந்தை நம்மை நம்முடைய சக்தி, அனுபவம் மற்றும் திறமைகளின் மீது நம்பிக்கை வைக்க கற்றுக்கொடுக்கிறது. ஆனால் தாழ்மை, நம்முடைய வரம்புகளை உணர்ந்து, தேவனை நம்புவதைக் தேர்ந்தெடுக்கிறது.

பல சபைத் தலைவர்கள் அழைப்பும் அர்ப்பணிப்பும் இல்லாததனால் அல்ல, சேவையின் பாரத்தை தனியாக சுமப்பதனால் சோர்ந்து போகிறார்கள். தேவனின் மீது இருந்த சார்பு தன்னம்பிக்கையாக மாறும்போது, ஜெபம் இரண்டாம் நிலைக்கு தள்ளப்படுகிறது, ஓய்வு பலவீனமாக தோன்றுகிறது, முடிவுகள் தனிப்பட்ட பொறுப்பாக உணரப்படுகிறது. காலப்போக்கில், இந்த அமைதியான தன்னம்பிக்கை ஆவியை சோர்வடையச் செய்கிறது.

உண்மையாக தேவனின் மீது சார்ந்திருக்கும் ஒருவரின் வாழ்க்கை மாறுபட்டதாக இருக்கும். அவர்கள் செயல்படுவதற்கு முன் ஜெபிக்கிறார்கள். தீர்மானிக்கும்முன் கேட்கிறார்கள். “எனக்கு தெரியாது” என்றும் “எனக்கு உதவி தேவை” என்றும் சொல்லத் தயங்கமாட்டார்கள். முடிவுகளை வற்புறுத்துவதற்குப் பதிலாக, தேவனின் நேரத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்களின் நம்பிக்கை திறமையிலோ செயல்திறனிலோ அல்ல, தேவனின் விசுவாசத்திலேயே இருக்கிறது.

தேவனின் மீது சார்ந்திருப்பது செயலற்ற நிலைக்கு இட்டுச் செல்லாது அது கீழ்ப்படிதலுக்கே இட்டுச் செல்லும். அது போராடும் மனநிலையிலிருந்து நம்மை விடுவித்து, அழுத்தத்துடன் அல்லாமல் மகிழ்ச்சியுடன் சேவை செய்ய அழைக்கிறது. உபவாசத்தினால் வாழ்க்கையும் சேவையும் மனித முயற்சியால் அல்ல, தேவனின் தாங்கும் கிருபையினால் நிலைத்திருக்கின்றன என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

இந்த வாரம் நம் இருதயங்களை ஆராயும்போது, நமது பிஸியான வாழ்க்கை அகந்தையை மறைத்து இருக்கிறதா, மேலும் நமது வலிமை தேவனுக்குச் சரணாகதியாக இருப்பதை மாற்றி இருக்கிறதா என்பதை நாம் கேள்வி கேட்க வேண்டும்.

**சிந்தித்து பாருங்கள்:**

உங்கள் பொறுப்புகளிலும் சேவையிலும், நீங்கள் தேவனின் வலிமையின் மீது அதிகமாக சார்ந்திருக்கிறீர்களா, அல்லது உங்கள் சொந்த திறமையின் மீது சார்ந்திருக்கிறீர்களா?

## *இன்றைய ஜெபம்*

1. பிதாவே, நான் உம்மை விட என்னையே சார்ந்திருந்த நேரங்களுக்கு என்னை மன்னியுங்கள். உம்மை முழுமையாக நம்பவும், இடைவிடாமல் ஜெபிக்கவும், உமது போதுமான கிருபையில் ஓய்வெடுக்கவும் எனக்கு கற்றுக்கொடுங்கள். உம்மோடு தாழ்மையோடு நடக்கக் கற்றுக்கொள்ளும் போது, என் வலிமையைப் புதுப்பியுங்கள். இயேசுவின் நாமத்தில், ஆமென்.

2. ஆண்டவரே, எங்களிடம் உள்ள அனைத்தும் தேவனிடமிருந்து இலவசமாகக் கிடைத்த வரங்கள் என்பதை மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்ள உமது சபைக்கு கற்றுக்கொடுங்கள். அதனால் நாம் அதில் பெருமை கொள்ளாமலும் அகந்தையடையாமலும் இருக்க உதவி செய்யும்.

3. வேகமாக மாறிக்கொண்டிருக்கும் சவாலான உலக சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அரசாங்க இயந்திரம் மாற்றங்களை விழிப்புணர்வுடனும் தகுதியாகவும் செயல்படுத்தும் வல்லமை பெற்றிருக்க ஜெபிக்கிறோம்.

# *விவேகமும் மற்றும் கற்றுக்கொள்ளும் இருதயம்*

"முட்டாள்களின் வழி அவர்களுக்கே நேராகத் தோன்றும் ஆனால் ஞானிகள் அறிவுரையை கேட்கிறார்கள்." (நீதிமொழிகள் 12:15)

தாழ்மையான இருதயம் கற்றுக்கொள்ளத் தயாரான இருதயமாகும். அகந்தை வெளிப்படிவிடும் என்ற பயத்தால் திருத்தத்தை எதிர்க்கிறது. ஆனால் தாழ்மை, "நான் தவறாக இருந்தேன்" என்று ஒப்புக்கொண்டு, நேர்மையான கருத்துக்களிலிருந்து வளரத் தயாராக இருப்பதாகும். இது பலவீனம் அல்ல ஆனால் ஆவிக்குறிய முதிர்ச்சியாகும்.

காலப்போக்கில், இருதயம் கற்றுக்கொள்ளத் தயாராக இருப்பது கடினமாகலாம். நமது பழக்கங்கள், கருத்துகள் மற்றும் செய்முறைகளில் பழகிக்கொண்டபோது, நாம் சௌகரியமாககூட கடினமானவர்களாக மாறலாம். முன்பு விவேகமாக இருந்தது மெதுவாக ஊகமாக மாறுகிறது. முன்பு உறுதியான நம்பிக்கையாக இருந்தது வழக்கமாக மாறுகிறது. தாழ்மை இல்லாமல் இருந்தால், நமது பழக்கங்கள் ஆவிக்குறிய குருட்டுத்தனமாக கடினமடைந்து விடும்.

தேவன் அடிக்கடி நம்மைச் சுற்றியுள்ளவர்களால் பேசுகிறார். தலைவர்கள், சக ஊழியர்கள், குடும்பத்தினர், மேலும் நம்முடன் ஒத்துக்கொள்ளாதவர்களாலும் கூட தாழ்மையான ஒருவர் கவனமாகக் கேட்கிறார், ஜெபத்துடன் கருத்துக்களை பரிசீலிக்கிறார், விரைவாக தன்னை பாதுகாக்கவும் நியாயப்படுத்தவும் செய்யும் உந்துதலை எதிர்க்கிறார். அதே நேரத்தில் தாழ்மை ஒரு விவேகமுள்ள இருதயத்தையும் தேவைப்படுத்துகிறது. அது மனிதர்களின் குரல்களைக் கேட்பதோடு மட்டுமல்லாமல், பரிசுத்த ஆவியின் மென்மையான உந்துதலையும் கேட்கிறது. பரிசுத்த ஆவி நம்மை உணர்த்தி, வழிநடத்தி, திருப்பி நடத்துகிறார். இதனால் நாம் தேவனுடைய சித்தத்தோடு ஒத்திசைந்து நிலைத்திருக்க முடியும்.

இந்த உபவாசமும் ஜெபமும் நிறைந்த காலத்தில், நம் இருதயங்களை மென்மையாக்கும்படி தேவனை வேண்டிக்கொள்ள வேண்டும். நாம் இன்னும் கற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோமா? நாம் இன்னும் மாற்றத்தை ஏற்கத் தயாராக இருக்கிறோமா? தாழ்மை, நம்மை தேவனுக்குப் பதிலளிக்கும் மனநிலையிலும் மாற்றத்திற்குத் திறந்தவர்களாகவும் வைத்திருக்கிறது.

**சிந்தித்து பாருங்கள்:**

நீங்கள் தற்காப்பு மனப்பான்மை கொள்ளாமல் ஒரு திருத்தத்தை ஏற்றுக்கொண்டது கடைசியாக எப்போது?

## இன்றைய ஜெபம்

1. ஆண்டவரே, எனக்கு தாழ்மையானதும் விவேகமுள்ளதுமான இருதயத்தை தாரும். திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவும், நான் தவறாக இருக்கும்போது அதை ஒப்புக்கொள்ளவும், உமது ஆவியின் வழிநடத்துதலைக் கேட்கவும் உதவி செய்யும். நான் வளர்ந்து செல்லாமல் தடுக்கின்ற அகந்தையின் எல்லா வடிவங்களையும் உடைத்து நீக்கும். இயேசுவின் நாமத்தில், ஆமென்.

2. தாழ்மை நம்முடைய ஒவ்வொரு இதயத் துடிப்பையும் நம் முயற்சிகளின் முடிவுகளையும் ஆட்சி செய்பவர் தேவன் ஒருவரே என்பதை ஒப்புக்கொள்ள கற்பிக்கிறது. நாம் பாதுகாப்பாக செல்வோமா இல்லையா என்பதையும் உட்படவும் கூட ஆகும். ஆண்டவரே, நாங்கள் முழுமையாக உம்மையே சார்ந்திருக்கிறோம், உமது சித்தத்திலேயே நிலைத்திருக்க விரும்புகிறோம்.

3. எங்கள் அரசாங்கம் பொருளாதாரத்தை பாதிக்கும் காலநிலை மாற்றங்களை சமாளிக்க ஞானம் பெற ஜெபிக்கிறோம். இனம் மற்றும் மதப் பாகுபாடுகளின்றி, அனைத்து குடிமக்களின் வாழ்வாதாரத்திற்காகத் தீவிரமான முடிவுகளை எடுக்க அவர்கள் முன்வரட்டும்.

# *அகந்தைக்கான எதிர்விஷம்*

*உபாகமம் 17:18–20 ஐ வாசிக்கவும்*

18 "அவன் ராஜாவாக சிங்காசனத்தில் அமரும்போது, லேவிய ஆசாரியர்களின் முன்னிலையில் இந்த நியமங்களின் புத்தகத்திலிருந்து தன்னுக்காக ஒரு பிரதியை எழுதிக்கொள்ள வேண்டும்.
19 அந்த பிரதியை அவன் எப்போதும் தன்னுடன் வைத்திருக்க வேண்டும் அவன் வாழும் நாட்களெல்லாம் அதை தினமும் வாசிக்க வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம், இந்த எல்லா கட்டளைகளையும் விதிகளையும் கடைப்பிடித்து, தன் தேவனாகிய கர்த்தரைப் பயப்படக் கற்றுக்கொள்வான்.
20 இந்த நியமங்களைத் தொடர்ந்து வாசிப்பது, அவன் தனது சக குடிமக்களைக் காட்டிலும் உயர்ந்தவன் என்று எண்ணி அகந்தையடையாமல் இருக்க உதவும். மேலும், இந்த கட்டளைகளிலிருந்து சிறிய அளவிலும் விலகாமல் இருக்கச் செய்வது. இதன் மூலம் அவனும் அவன் சந்ததியினரும் இஸ்ரவேலில் பல தலைமுறைகள் ஆட்சி செய்ய உறுதியாகும்."

அகந்தை மிகவும் நுணுக்கமாக நம்முள் புகுந்து கொள்ள முடியும். இந்த பாவத்திலிருந்து நம்மை காக்காவிட்டால், சாத்தான் அதை பயன்படுத்தி நம்மை மட்டுமல்லாமல், நம் குடும்பங்களுக்கும், இயேசுவை பின்பற்ற முயலும் முன்மாதிரியாக நம்மை நோக்கி பார்க்கும்வர்களிடையேயான நம் சாட்சியத்தையும் அழிக்கக்கூடும்.

இந்த மறைமுகமாகச் செயல்படும் பாவத்திற்கு ஒரு எதிர்விஷம் உபாகமம் 17:18–20 இல், குறிப்பாக 20ஆம் வசனத்தில் காணப்படுகிறது. தேவனுடைய வார்த்தையை தொடர்ந்து வாசிக்கும் பழக்கம், தேவனையும் நம்முடைய அயலாரையும் நேசிக்க வேண்டும் என்ற மனப்பாங்குடன் செய்தால், அவருக்கு முன்பாக தாழ்மையோடு நடக்க வேண்டும் என்ற நமது விருப்பத்தை நிறைவேற்றவும் உதவும்.

## *இன்றைய ஜெபம்*

1. அதிகாரத்தின் இடங்களில் நடக்கும் விசுவாசிகள், அகந்தையின் பாவத்திலிருந்து தங்கள் இருதயங்களை காக்க வேண்டும். இஸ்ரவேலின் முதல் ராஜா தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் முன்பே தேவன் இந்த கவலையை நிறுவினார்.

2. மத்தேயு 20:25 இல் இயேசு, "மற்றவர்களை ஆட்சி செய்து ஆள வேண்டாம்" என்று எச்சரித்தார். தேவனுடைய தலைவர்கள் தங்களைச் சார்ந்த லாபத்திற்காக ஆட்சி செய்யாமல், பிறருக்காக தியாகமான அக்கறையுடன் வழிநடத்த வேண்டுமென்று ஜெபிப்போம்.

3. எங்கள் நாட்டிள் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அவர்கள் மக்களின் நலன்களையும் கவலைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை நினைவில் கொண்டு தங்கள் சொந்த திட்டங்களை முன்னேற்றுவதற்காக அல்ல என்று ஜெபிப்போம்.

## நாள் 14

*வியாழக்கிழமை, 20 ஆகஸ்ட் 2026*

# *எங்கள் இருதயத்தில் என்ன உள்ளது?*

*எரேமியா 17:9–10 (NKJV) ஐ வாசிக்கவும்*

9 “இருதயம் எல்லாவற்றிலும் ஏமாற்றமுடையதும், மிகவும் தீயதுமானதும் ஆகும்
அதை அறிந்து கொள்ள யார் முடியும்? 10 நான் கர்த்தர், இருதயத்தை
ஆராய்கிறவன் மனதைச் சோதிக்கிறவன் ஒவ்வொருவருக்கும் அவரவர்
வழிகளின்படியும், அவரவர் செயல்களின் பலனின்படியும் கொடுக்கிறவன்.”

நேற்று நாம் தேவன் எவ்வாறு நம்மை தாழ்மையோடு அவருக்கு முன்பாக நடக்க உதவுகிறார் என்பதை பார்த்தோம். இன்று, அவர் இதைச் செய்யும் இன்னொரு வழியைப் பார்க்கிறோம்: நாம் எவ்வாறு பதிலளிக்கிறோம் என்பதை அறிய, சவால்களையும் தாழ்த்தும் சூழ்நிலைகளையும் அனுபவிக்க அனுமதிப்பதன் மூலம் அதை பார்க்கிறார்.

நாம் விமர்சிக்கப்படும்போதோ, கேலிக்குள்ளாகும்போதோ, கௌரவிக்கப்படும்போதோ மதிக்கப்படும்போதோ, அல்லது பதவி உயர்வில் நாம் புறக்கணிக்கப்படும்போது நாம் எவ்வாறு நடத்தப்பட்டு சேவை பெறுகிறோம் என்பதில் இந்த சோதனைகள் பல வழிகளில் வரலாம்.

இத்தகைய தாழ்த்தும் சூழ்நிலைகள் நிகழும்போது, நமது வார்த்தைகளிலும் செயல்களிலும் வெளிப்படும் வகையில் நமது இருதயத்திலும் மனதிலும் உண்மையில் என்ன இருக்கிறது என்பதை வெளிக்காட்ட தேவன் அவற்றைப் பயன்படுத்துகிறார்.

தேவனுக்கும் நம்மை தாழ்த்துகிறவர்களுக்கும் நாம் எப்படி பதிலளிக்கிறோம் என்பது மிகவும் முக்கியமானது. நமது பதிலுரை பரலோகத் தந்தையின் அடுத்த செயல்பாட்டை நிர்ணயிக்கிறது. ஏனெனில் அவர் விருப்பம் நாம் இயேசுவைப் போன்றவர்களாக மாறுவதாகும். பிலிப்பியர் 2:1–8 ஐ பார்க்கவும்.

## *இன்றைய ஜெபம்*

1. இஸ்ரவேல் ஜனங்கள் 40 ஆண்டுகள் வனாந்தரத்தில் அலைந்தபோது, தேவன் தமது நிலையான சன்னிதியை அவர்களுக்கு உறுதியாக அளித்தார். இயேசு தமது சீஷர்களுக்கு பெரிய பணியை அளித்தபோது, மத்தேயு 28:20-இல் இந்த உடன்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினார்: "இதோ, நான் உலகத்தின் முடிவுவரை எப்போதும் உங்களோடு இருக்கிறேன்." நாம் அவருடைய நிலைத்திருக்கும் சன்னிதியை அனுபவிக்கக் தேவன் கிருபை புரிவாராக.

2. நமது ஆவிக்குறியப் பயணத்தில் சோதனைகளும் பரிசோதனைகளும் வரும். அவை நம்மை கூர்மைப்படுத்தவும், தாழ்த்தவும், சவாலிடவும் செய்கின்றன. அப்போது நமது பார்வை நமது விசுவாசத்தின் ஆரம்பகர்த்தரும் நிறைவேற்றுகிறவருமான இயேசுவின் மேல் நிலைத்திருக்க வேண்டும். நிலைத்திருக்கும் வலிமையையும் ஜெயிக்கிற கிருபையையும் பெற ஜெபிப்போம்.

3. அரசியல்வாதிகள் மக்கள் கண்களில் நம்பிக்கையைப் பெறுவது பல சமயங்களில் கடினமாக இருக்கும். கிறிஸ்தவ அரசியல்வாதிகளும் இந்த கருத்திலிருந்து விலக்கப்படவில்லை. கிறிஸ்தவ அரசியல்வாதிகள் தேவனுக்குப் பயந்து, அவரோடு நெருக்கமாக நடக்க ஜெபிப்போம். அவர்களை பெயர்பெயராகக் குறிப்பிட்டு ஜெபியுங்கள்.

# *அவர் இருதயத்தை வடிவமைக்கிறார்*

*சங்கீதம் 105:17–19 ஐ வாசிக்கவும்*

17 அவர்களுக்கு முன்னதாகவே தேவன் ஒருவரை எகிப்துக்கு அனுப்பினார்.
அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு. 18 அவருடைய கால்களை சங்கிலிகளால்
கட்டினார்கள் அவருடைய கழுத்தில் இரும்புக் கட்டையும் போட்டார்கள். 19
அவருடைய கனவுகள் நிறைவேறும் காலம் வரைக்கும், கர்த்தர் யோசேப்பின்
குணத்தைச் சோதித்தார்.

**ஆதியாகமம் 37:5–8**

5 ஒரு இரவு யோசேப்பு ஒரு கனவு கண்டான். அதைத் தன் சகோதரர்களிடம்
சொன்னபோது, அவர்கள் அவனை இன்னும் அதிகமாக வெறுத்தார்கள். 6 அவன்
சொன்னான்: "இந்த கனவை கேளுங்கள். 7 நாம் வயலில் தானியக் கட்டுகளை
கட்டிக்கொண்டிருந்தோம். திடீரென என் கட்டு எழுந்து நின்றது உங்கள் கட்டுகள்
அனைத்தும் சுற்றி வந்து என் கட்டிற்கு முன் தாழ்ந்து வணங்கின!" 8 அதற்கு
அவன் சகோதரர்கள், "நீ எங்கள் ராஜாவாக இருப்பாய் என்று நினைக்கிறாயா?
உண்மையில் எங்களை ஆட்சி செய்வாய் என்று எண்ணுகிறாயா?" என்று
கேட்டார்கள். அவன் கனவுகளாலும் அவன் அவற்றைப் பற்றி பேசிய
விதத்தாலும், அவர்கள் அவனை இன்னும் அதிகமாக வெறுத்தார்கள்.

நேற்று, தேவன் "இருதயத்தை ஆராய்ந்து மனதைச் சோதிப்பார்" (எரேமியா 17:10) என்பதை நாம் கற்றுக்கொண்டோம்.

இதற்கான வலுவான ஒரு எடுத்துக்காட்டு யோசேப்பின் வாழ்க்கையில் காணப்படுகிறது அவரது கதை ஆதியாகமம் 37 மற்றும் 39–50 அதிகாரங்களில் உள்ளது. குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், ஆதியாகமப் புத்தகத்தின் 12 அதிகாரங்கள், அதாவது 20மூ க்கும் மேற்பட்ட பகுதி, அவருடைய வாழ்க்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வரலாற்றின் பெரும்பகுதி, தேவன் தனது ஆவிக்குறிய திட்டத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்ற அவரைப் பயன்படுத்துவதற்கு முன்பு, யோசேப்பு அனுபவிக்க வேண்டிய தாழ்மைப்படுத்தும் செயல்முறையைப் பற்றி கவனம் செலுத்துகிறார்.

இறுதியில், இந்த சோதனைகளுக்கு யோசேப்பு கொடுத்த இறுதி பதில், அவரது இருதயத்தின் உண்மையான நிலையை வெளிப்படுத்தியது. ஆதியாகமம் 50:14–21 ஐ பார்க்கவும்.

## இன்றைய ஜெபம்

1. தேவனுடைய ஜனங்களாகிய நாம், சரியானதைச் செய்தபோதும் பலமுறை தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறோம். அவர்களுக்கு பாதுகாப்பு கிடைக்கவும், ஆதியாகமம் 18:25 இல் அபிரகாம் கேட்டதுபோல் "பூமியெல்லாம் நீதிபதி நீதியாக நடக்கமாட்டாரா?" என்ற நம்பிக்கையுடன் தேவனை நோக்கிப் பார்ப்பதற்கும் ஜெபிப்போம்.

2. இளம் தலைமுறையினரை தயார் செய்யவும் அவர்கள் சில நேரங்களில் தவறாகப் பேசினாலும், "தேவன் அதை நன்மைக்காகவே செய்தார் பலரின் உயிர் காக்கப்படுவதற்காகவே அது நிகழ்ந்தது" (ஆதி. 50:20) என்பதை அவர்கள் இன்னும் உணராமல் இருக்கிறதால் தேவனிடத்தில் வேண்டிக்கொள்வோம்.

3. மாநிலத்தின் பொருளாதார வளங்களை வீணாக்கும் அரசாங்க நிறுவனங்கள்.˙.நிறுவனங்களை மூடுவதற்கான துணிவும் ஞானமும் தேசிய தலைவர்களுக்கு கிடைக்க நாம் ஜெபிப்போம். கடினமான நாட்கள் முன் நிற்கின்றன் தேசிய அளவில் எடுக்கப்படும் முடிவுகள் சிரமமானதாக இருப்பதால் ஜெபிப்போம்.

*சனிக்கிழமை, 22 ஆகஸ்ட் 2026*

# *விவேகத்துடன் கீழ்ப்படிதல்*

***“கர்த்தருக்காக, எல்லா மனித அதிகாரங்களுக்கும் உங்களை கீழ்ப்படையுங்கள்.” (1 பேதுரு 2:13)***

தாழ்மையின் முக்கியமான ஒரு வெளிப்பாடு அதிகாரத்திற்கு கீழ்ப்படிதல் ஆகும். சுயாதீனத்தையும் தன்னம்பிக்கையையும் உயர்த்திப் பாராட்டும் கலாச்சாரத்தில், கீழ்ப்படிதலை ஒரு ஆவிக்குறிய ஒழுக்கமாக நடைமுறைப்படுத்தும்படி வேதாகமம் நம்மை அழைக்கிறது. சபையிலோ, வேலைத்தளத்திலோ, குடும்பத்திலோ இருந்தாலும், தேவன் ஒழுங்கு, தலைமை மற்றும் பொறுப்புணர்வு வழியாக செயல்படுகிறார் என்பதை தாழ்மை உணர்கிறது.

ஆனால் வேதாகமப்படி கீழ்ப்படிதல் என்பது கண்மூடித்தனமான கீழ்ப்படிதல் அல்ல. நமது உயரமான நம்பிக்கை தேவனுக்கே உரியது. ஏதாவது தவறாகவோ, அநியாயமாகவோ, அல்லது தேவனுடைய சத்தியத்திற்கு விரோதமாகவோ தோன்றும்போது, தாழ்மை அமைதியாக இருக்காது. அது மென்மையுடனும் மரியாதையுடனும் பேசும். அகந்தை கோபத்தோடும் கிளர்ச்சியோடும் பதிலளிக்கும் ஆனால் தாழ்மை அன்பினால் தைரியமாகப் பதிலளிக்கும்.

யாக்கோபு நம்மை “கேட்க விரைவாகவும், பேச மந்தமாகவும், கோபப்பட மந்தமாகவும் இருங்கள்” (யாக்கோபு 1:19) என்று நினைவூட்டுகிறார். தாழ்மையான இருதயம், தன்னைப் புரிந்துகொள்ளும்படி வற்புறுத்துவதற்கு முன், முதலில் புரிந்துகொள்ள முயல்கிறது. அது கவனமாகக் கேட்கிறது, ஜெபத்துடன் விவேகிக்கிறது, பின்னர் ஞானத்துடன் பேசுகிறது. இந்த மனப்பாங்கு உண்மையை காக்கும்போதே உறவுகளையும் பாதுகாக்கிறது.

தாழ்மையால் வடிவமைக்கப்பட்ட கீழ்ப்படிதல் என்பது நம்முடைய உறுதியான நம்பிக்கைகளை ஒடுக்குவது அல்ல. அது கசப்பும், கட்டுப்படுத்தும் மனப்பான்மையும், பயமும் இல்லாமல், தேவனை நம்பி நம்முடைய கவலைகளை வெளிப்படுத்துவதாகும். நமது இருதயங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிதலில் நிலைபெற்றிருக்கும்போது, அதிகாரத்துடன் நாம் விசுவாசத்துடனும் நேர்மையுடனும் தொடர்பு கொள்ள முடியும்.

நாம் உபவாசமும் ஜெபமும் செய்கிற இந்த காலத்தில், ஒவ்வொரு உறவிலும் ஆண்டவராகிய ஆட்சிக்கீழ் வாழ கற்றுக்கொள்ள தேவன் நமக்கு உதவுவாராக.

**சிந்தித்து பாருங்கள்:**

நீங்கள் அதிகாரத்திற்கு தாழ்மையுடனும், விவேகத்துடனும், மரியாதையுடனும் பதிலளிக்கிறீர்களா?

## *இன்றைய ஜெபம்*

1. ஆண்டவரே, ஞானத்துடனும் கிருபையுடனும் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொடுங்கள். நன்றாகக் கேட்கவும், மென்மையாகப் பேசவும், எல்லாவற்றிற்கும் மேலாக உம்முக்கே கீழ்ப்படையவும் எநக்கு உதவி செய்யவும். ஒவ்வொரு உறவிலும் உம்மை மகிமைப்படுத்தும் தாழ்மையான ஆவியை என்னுள் உருவாக்கும். இயேசுவின் நாமத்தில், ஆமென்.

2. ஊ.ளு. லூயிஸ் கூறியதுபோல், "தாழ்மை என்பது நம்மைப் பற்றி குறைவாக நினைப்பது அல்ல் நம்மைப் பற்றி குறைவாக நினைப்பதுதான்." தாழ்மை என்பது பலவீனம் அல்லது தன்னைத்தாழ்த்திக் கொள்ளுதல் அல்ல. ஆண்டவரே, உம்முடன் உள்ள உறவில் தாழ்மையுடன் இருந்து, கட்டுப்பாட்டில் உள்ள வலிமையைப் பெற உதவி செய்யவும்.

3. மலேசியா எண்ணெய் மற்றும் எரிவாயு போன்ற இயற்கை வளங்களால் ஆசீர்வதிக்கப்பட்ட நாடாகவும், இந்த வழங்கல் சங்கிலி (ளரீடல உாயஉை) வலுப்பெற்று, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து உறுதிப்படுத்துமாறு ஜெபிப்போம்.



# தாழ்மையின் நன்மைகள்

## வாரம் 3

# நாள் 17

ஞாயிறு, 23 ஆகஸ்ட் 2026

## *தாழ்மை நம்மை தேவனில் முழுமையாக நம்பச் செய்கிறது*

**“அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும்பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம் பெற்றேன்.”
(1 தீமோத்தேயு 1:16)**

உண்மையான ஆவிக்குரியவர்களின் வாழ்க்கையில் ஒரு பொதுவான அடையாளம் உள்ளது: அது முழுமையானதும் உண்மையானதுமான தாழ்மை. அமெரிக்க ஆவிக்குரிய எழுத்தாளரும் தத்துவவியலாளருமான A. W. Tozer இதைப் பொருத்தமாகச் சொல்கிறார்: “தாழ்மை என்பது வெளிப்படும் நடத்தை அல்ல் அது உள்ளத்தின் மனப்பாங்கு நம்மிடம் உள்ள எல்லா நன்மைகளும் தேவனிடமிருந்து வந்தவை என்பதைக் உணர்வதே தாழ்மை.”

புதிய ஏற்பாட்டில் ஒரு சிறந்த தலைவராக விளங்கிய அப்போஸ்தலர் பவுல், தனது காலத்தில் ஒரே மாதிரியான அப்போஸ்தலராகவும், தேவனின் அருமையான படைப்பாகவும் இருந்தார். தேவனுடைய நோக்கங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிறப்பு பாத்திரமாக அவர் அமைக்கப்பட்டார். ஒருகாலத்தில் இயேசு கிறிஸ்து அவருடைய சீஷர்களை கடுமையாக துன்புறுத்தியவராக இருந்த பவுல், தமஸ்கூஸ் செல்லும் பாதையில் ஆண்டவரைச் சந்தித்த அனுபவத்தால் முழுமையாக மாற்றப்பட்டார். அதன்பிறகு அவரது வாழ்க்கை ஆழ்ந்த மனந்திரும்புதலும், தாழ்மையும், அசைக்க முடியாத கீழ்ப்படிதலும் நிறைந்ததாக மாறியது. அவர் தேவனை உண்மையுடன் சேவித்து அவரை நெருக்கமாகப் பின்பற்றியவரானார்.

அப்போஸ்தலர் பவுல் அவருடைய தாழ்மை, தனது பலவீனங்களையும் வரம்புகளையும் தெளிவாக உணரச் செய்தது அவர் இன்னும் அதிகமாக தேவனை நம்பி சார்ந்தார். அவர் அதிசயங்களைச் செய்தார், எழுத்துகளை (எபிஸ்தல்களை) எழுதி சபைகளை நிறுவினார். இருந்தபோதிலும், அவர் தன்னை “பாவிகளில் முதலவன்”

(1 தீமோத்தேயு 1:15–16) என்று குறிப்பிடுவதில் தயங்கவில்லை. அவருடைய பல சிறந்த குணங்களில் மிக முக்கியமானது, அவரது முழுமையான தாழ்மையும் கீழ்ப்படிதலும் ஆகும். அவர் தன்னுடைய நிலையை அடிக்கடி தாழ்த்தி “இயேசு கிறிஸ்துவின் தாசன்”,“பரிசுத்தர்களில் மிகவும் சிறியவன்”, “அப்போஸ்தலன் என அழைக்கத் தகுதியில்லாதவன்”, “பாவிகளில் முதல்வன்” என்று தன்னை விவரித்தார். இந்த மனமார்ந்த ஒப்புக்கொள்ளல்கள் உண்மையான தாழ்மையும் சரணாகதியும் கொண்ட இருதயத்திலிருந்து மட்டுமே வெளிப்படுகின்றன. இத்தகைய தாழ்மை, நம்முடைய ஆண்டவரிடத்தில் உதவியும் வழிநடத்தலும் பெற நாம் மேலும் ஆழமாக சார்ந்து வாழ உதவுகிறது. அதன் மூலம், அவருடைய பரிபூரண சித்தம் நம்முடைய வாழ்க்கைகளின் மூலம் இந்த பூமியில் நிறைவேறுகிறது.

## *இன்றைய ஜெபம்*

1. ஆண்டவரே, எங்கள் சொந்த எண்ணங்களிலும் சந்தேகங்களிலும் இன்னும் பற்றிக் கொண்டு இருக்கும் பகுதிகளில் உங்கள் ஒளியைப் பிரகாசிக்கச் செய்யும். எங்களை நாங்களே ஒதுக்கி வைத்து, முழு மனதுடன் உம்மை நம்ப உதவிடும்.

2. ஆண்டவரே, கிருபையினால் இரட்சிக்கப்பட்ட பாவிகளாகிய நாங்கள் என்பதை எப்போதும் நினைவூட்டும். கிறிஸ்துவில் தாழ்மையுடன் நிலைத்து, உம்மோடு நெருக்கமாக நடக்க உதவிடும்.

3. மலேசிய கல்விக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ஜெபிக்கிறோம். எதிர்காலத்தில் நல்ல குடிமக்களை உருவாக்கி, உலகின் சவாலான தேவைகளை எதிர்கொள்ளக் கூடிய தலைமுறையை உருவாக்க உதவிடும்.

# நாள் 18

*திங்கள், 24 ஆகஸ்ட் 2026*

## *தாழ்மை நல்ல உறவுகளை வளர்க்கிறது*

**“எல்லாவற்றையும் அனுபவிக்க உரிமையுண்டு” என்று சொல்லப்படுகிறது. ஆனால் எல்லாமே பயனுள்ளதாயிராது. “எல்லாவற்றையும் அனுபவிக்க உரிமையுண்டு.” ஆனால், எல்லாம் வளர்ச்சியடைவதற்கு உகந்தவையல்ல. ஒருவனும் தனது நலனை மட்டுமே தேடக்கூடாது மற்றவர்களது நலனையும் தேடவேண்டும். (1 கொரிந்தியர் 10:23–24)**

நடுக்காலத்தின் புகழ்பெற்ற தத்துவஞானியும் தெய்வவியலாளருமான ஆகஸ்டின் ஒருமுறை இப்படிச் சொன்னார்: “கிறிஸ்தவ வாழ்க்கையில் மிக முக்கியமான நற்குணம் எது என்று என்னைக் கேட்டால், நான் சொல்லுவது: முதலில் தாழ்மை இரண்டாவது தாழ்மை மூன்றாவது கூட தாழ்மை.” தாழ்மை என்பது ஆண்டவருக்குச் சேவை செய்யும் முதல் படியாகும் அதே நேரத்தில் அது மிக முக்கியமானதுமாகும். அது மனித உறவுகளில் ஒற்றுமையை வளர்த்து பிறருடன் எளிதாக பழக உதவுகிறது. ஒரு தாழ்மையானவர் மற்றவர்களுக்கு அழுத்தம் கொடுக்கவோ அல்லது அவர்களை தாழ்வாக உணரச் செய்யவோ மாட்டார். மாறாக, அவர் கேட்கத் தயாராக இருப்பார், ஒத்துழைப்பில் திறமையுடையவராக இருப்பார், மேலும் பிறரின் நம்பிக்கையை எளிதில் பெறுவார்.

உண்மையான தாக்கம் உள்ள தலைவர்கள் அகந்தையுடன் இருப்பவர்கள் அல்ல் அவர்கள் தாழ்மையானவர்கள். தாழ்மை மனிதர்கள் உறவுகளை மதிக்கவும், குழுவாகச் சிறப்பாகச் செயல்படவும், வேறுபட்ட கருத்துகளையும் பார்வைகளையும் ஏற்றுக்கொள்ளவும் உதவுகிறது. இத்தகைய தலைவர்கள் தங்களின் அதிகாரத்தைப் பயன்படுத்துவதால் அல்ல, பிறரைச் சேவித்து உதவுவதன் மூலம் தங்கள் தாக்கத்தை உருவாக்குகிறார்கள். அப்போஸ்தலர் பவுல் கூறுவது போல: “எல்லாம் எனக்குச் சாத்தியமானவையே,” ஆனாலும் எல்லாம் பயனுள்ளதல்ல. “எல்லாம் எனக்குச் சாத்தியமானவையே,” ஆனாலும் எல்லாம் வளர்ச்சியளிப்பதில்லை. ஒருவர் தன் நலனை நாடாமல், தன் அயலானின் நலனையே நாடட்டும்.”

(1 கொரிந்தியர் 10:23–24) ஒரு தலைவர் உறவுகளை மையமாகவும் தேவனை மையமாகவும் வைத்திருக்கும்போது, அவர் வழிநடத்தும் மக்களிடமிருந்து மரியாதையையும் நம்பிக்கையையும் பெறுகிறார். மாறாக, அகந்தையுள்ளவர்கள் தேவனைப் பற்றிய பயபக்தியைக் கொண்டிருக்காமல், பிறரைப் பற்றியும் கவலைப்படாமல் இருப்பார்கள் இதனால் உறவுகளில் வாதங்களும் பதற்றங்களும் உருவாகின்றன. ஆகையால், அனைவருடனும் நல்ல முறையில் இணங்கி வாழ தாழ்மையான இதயம் மிகவும் அவசியமானது.

## *இன்றைய ஜெபம்*

1. ஆண்டவரே, எங்கள் இருதயங்களில் உள்ள எல்லா அகந்தையையும் நீக்கி, உம்மோடும் பிறரோடும் உள்ள உறவுகளை மதிக்க உதவும்.

2. ஆண்டவரே, எல்லோரையும் தாழ்மையான இதயத்துடன் நடத்த கற்றுக்கொடுக்கவும். எங்களின் சொந்த நலன்களை மட்டும் நினைப்பதற்குப் பதிலாக, எங்களைச் சுற்றியுள்ளவர்களின் தேவைகளையும் உணர்ச்சிகளையும் உண்மையாகக் கவனிக்க உதவிடும். தன்னலமற்ற அன்பினால் பிறரை முன்னிலைப்படுத்திய இயேசு கிறிஸ்து அவரைப் போல வாழ எங்களை நடத்திடும்.

3. மலேசியாவின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்து வரும் சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் (SMEs) குறித்து ஜெபிக்கிறோம். அவை வேலைவாய்ப்புகளை உருவாக்கி, வணிகங்களை நிலைநிறுத்தி, இனங்களுக்கிடையிலான பணிச்சூழல் உறவுகளை வலுப்படுத்தியுள்ளன. இத்தொழில்கள் வளர்ச்சியைத் தொடர அரசாங்கம் புதுமையான ஊக்கத்திட்டங்களை வழங்க உதவிடும்.

# *தாழ்மை மனிதர்களுக்கு சமாதானத்தை மதிக்கவும், பெரிய நோக்கத்தை முன்னிலைப்படுத்தவும் உதவுகிறது*

**"பூமியில் இருந்த எல்லா மனிதர்களிலும் மோசே மிகவும் தாழ்மையானவராக இருந்தார்."**
**(எண்ணாகமம் 12:3)**

புகழ்பெற்ற மிஷனரியான Hudson Taylor ஒருமுறை இப்படிச் சொன்னார்: "தம்முடைய வல்லமையை வெளிப்படுத்துவதற்காக தேவன் பலவீனமானதும் தாழ்மையானதும் ஆன மனிதர்களைக் தேடுகிறார்." தாழ்மை கிறிஸ்தவ வாழ்க்கையிலும் ஊழியத்திலும் மையமான இடத்தைப் பெறுகிறது் அது ஒருவரின் ஆவிக்குரிய வாழ்க்கையில் பல ஆசீர்வாதங்களை அளிக்கிறது. தாழ்மையானவர் தன்னுடைய வரம்புகளையும் குறைகளையும் உணர்ந்திருப்பார் தனது வெற்றிகள் அவரை சுய திருப்தியடையச் செய்ய அனுமதிக்கமாட்டார். அவர் பிறரைக் கவனமாகக் கேட்க விரும்புவார், புதிய விஷயங்களை கற்றுக்கொள்ள ஆர்வமாக இருப்பார், தொடர்ந்து வளர்ந்து புதுப்பிக்கப்படுவார்.

மோசே இப்படிப்பட்ட ஒருவருக்கான சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறார். எகிப்திலிருந்து இஸ்ரவேலரைக் கோடிக்கணக்கான மக்களாக வழிநடத்தியபோது, அவர் மிகுந்த தலைமைப் பொறுப்பையும் அழுத்தத்தையும் சுமந்தார் எல்லாத் திசைகளிலிருந்தும் விமர்சனங்களைச் சந்தித்தார். மக்களின் இடையறாத முறையீடுகளையும் (எண்ணாகமம் 13:1–3 14:1–10) மட்டுமல்லாமல், தனது சகோதரி மிரியாமும் சகோதரன் ஆரோனும் செய்த குற்றச்சாட்டுகளையும் (எண்ணாகமம் 12:1–10) அவர் சகித்துக் கொண்டார். ஆனால் மோசே தன்னைத் தானே பாதுகாக்க முயற்சிக்கவில்லை. மாறாக, மென்மையான இருதயத்துடன் அனைத்தையும் தேவனிடம் ஒப்படைத்து, அவர் தலையிடுவதை காத்திருந்தார். தன் அனுபவத்தையோ அதிகாரத்தையோ சார்ந்து கொள்ளாமல், தேவனுடைய வழிநடத்தலுக்கு கீழ்ப்படிந்து, வெளியேறும் பயணத்தின் கஷ்டங்களையும் சவால்களையும் மனமுவந்து எதிர்கொண்டார்.

தாழ்மையானவர்கள் தங்கள் பெருமையையோ நிலைமையையோ பற்றிக் கவலைப்படாமல், ஒரு படி பின்வாங்கி பெரிய நோக்கத்தைப் பார்க்க முடியும். இதனால் அவர்கள் மோதல்களைச் சமாளித்து, சிறந்த தீர்வுகளை கொண்டு வர முடிகிறது. உதாரணமாக, பல தலைமைச் சவால்களுக்கிடையிலும் மோசே தேவனுடன் தாழ்மையுடன் நடந்து, எல்லா மகிமையையும் முழுமையாக அவருக்கே ஒப்புக்கொடுத்தார். ஆகவே வேதாகமம் அவரைப் பற்றி இப்படிக் கூறுகிறது: "பூமியில் இருந்த எல்லா மனிதர்களிலும் மோசே மிகவும் தாழ்மையானவராக இருந்தார்." (எண்ணாகமம் 12:3)

## *இன்றைய ஜெபம்*

1. ஆண்டவரே, எங்கள் வரம்புகளை உணர உதவிடும். பிறரிடமிருந்து தாழ்மையுடன் கற்றுக்கொள்ளும் போதிக்கும் இருதயங்களை எங்களுக்கு அளித்து வழிகாட்டலைக் கேட்க எப்போதும் தயங்காதவர்களாக இருக்க உதவிடும்.

2. ஆண்டவரே, தாழ்மையுடன் பிறரை நம்மைவிட மேன்மையானவர்களாக எண்ண கற்றுக்கொடுக்கவும். சுயநல ஆசையாலும் வீண்பெருமையாலும் எதையும் செய்யாமல், நம் முடைய நலன்களை மட்டும் அல்லாமல், பிறரின் நலன்களையும் கவனிக்க உதவிடும்.

3. மலேசியாவின் மடானி (Madani) அரசாங்கத்தின் இன்றைய செயல்பாடுகளும் அணுகுமுறைகளும் எதிர்கால அரசாங்கத்தின் திசையை அமைக்கும் முக்கியமானவையாய் இருப்பதால் மலேசியாவின் சிவில் சேவைகளில் முழுவதும் சமாதானமும் ஒற்றுமையும் நிலவ ஜெபிக்கிறோம்.

# *தாழ்மை தேவனுக்குக் கீழ்ப்படிவதையும், அவரால் வல்லமையாகப் பயன்படுத்தப்படுவதையும் எளிதாக்குகிறது*

**"அப்பொழுது யோசேப்பு பார்வோனுக்குப் பிரதியுத்தரமாக: நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச்செய்வார் என்றான்." (ஆதியாகமம் 41:16)**

புகழ்பெற்ற விசுவாசத் தலைவரான George Muller ஒருமுறை இப்படிச் சொன்னார்: "தேவன் பயன்படுத்தும் பாத்திரம் தாழ்மையான பாத்திரமாக இருக்க வேண்டும்." ஆவிக்குரிய நிலையில், தாழ்மை மிகுந்த நன்மைகளை அளிக்கிறது. தாழ்மை ஒருவரை தேவனுடைய வழிநடத்தலுக்கு எளிதில் கீழ்ப்படிவதற்கும், தன் செயல்களை விட தேவனுடைய கிரியையைப் பார்க்க உதவுகிறது. தாழ்மையானவர் ஒவ்வொரு தருணத்திலும் போட்டியிடவேண்டிய அவசியம் உணரமாட்டார் மற்றவர்களை விட தன்னை மேலானவர் என நிரூபிக்க முயற்சிக்க மாட்டார். இதனால், அவருடைய இதயம் இலகுவாக இருக்கும், கவலை குறையும், விசுவாசம் அதிகரிக்கும். இப்படிப்பட்ட தாழ்மையான வாழ்க்கை ஆழமான ஆவிக்குரிய மாற்றத்தை ஏற்படுத்தி, தேவன் மகிழ்ச்சியுடன் பயன்படுத்தும் தலைவராக அவரை உருவாக்குகிறது.

இப்படிப்பட்ட ஒருவருக்கான வேதாகமத்தில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு யோசேப்பு ஆவார். பதினேழு வயதில், யோசேப்பு தன் சகோதரர்களால் எகிப்துக்கு விற்கப்பட்டார். பின்னர், போதிபாரின் மனைவியால் பொய்யாக குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவர் கனவை விளக்கிய கிண்ணபானகரனால் கூட மறக்கப்பட்டார். ஆனால், அவரது தாழ்மையான கீழ்ப்படிதலினால் தேவன் அவரை ஒருபோதும் கைவிடவில்லை. இறுதியாக பார்வோனின் முன் நின்று கனவின் அர்த்தத்தை விளக்கும்போது, தனது ஞானத்திற்கான எல்லா மகிமையையும் தேவனுக்கே ஒப்புக்கொடுத்து, அவர் இப்படிச் சொன்னார்: "இதற்கு நான் காரணமல்ல் தேவனே பார்வோனுக்கு உகந்த பதிலை அளிப்பார்."(ஆதியாகமம் 41:16)

யோசேப்பு எகிப்தின் ஆளுநராக உயர்ந்த அதிகார நிலைக்கு உயர்த்தப்பட்ட பிறகும், ஒருகாலத்தில் தன்னை இகழ்ந்து, காயப்படுத்தி, அடிமையாக விற்ற தனது சகோதரர்களை அவர் மென்மையுடனும் கருணையுடனும் நடத்தினார் (ஆதியாகமம் 37:18–36). அத்தனைக்கும் பிறகும், அவரது இதயத்தில் கசப்பும், வெறுப்பும், பழிவாங்கும் எண்ணமும் இல்லை (50:15–21). இது தாழ்மையால் உண்டாகும் அழகான ஆவிக்குரிய கனியாகும். எல்லாவற்றையும் தேவன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்று முழுமையாக நம்புவதற்கு இது உதவுகிறது. புகழ்பெற்ற தெய்வவியலாளரான John Calvin கூறியது போல: "உண்மையான தாழ்மை என்பது தன்னைத்தான் மறந்து, தேவனுடைய மகிமையை நோக்கி மனதை நிலைநிறுத்துவது ஆகும்." அது தன்னிடம் அல்ல, தேவனுக்கே எல்லா மகிமையையும் கொடுக்கத் தேர்வு செய்வதும், அவருடைய வழிநடத்தலுக்கு மனமுவந்து கீழ்ப்படிவதும், அவருடைய சித்தம் நிறைவேறுவதில் மகிழ்ச்சியடைவதும், ஆண்டவரால் பயன்படுத்தப்படத் தயார் இருப்பதுமாகும்.

## *இன்றைய ஜெபம்*

1. ஆண்டவரே, எங்கள் கடினமான இருதயங்களை மென்மையாக்கும் எங்களை மென்மையானவர்களாகவும், கற்றுக்கொள்ளத் தயாரானவர்களாகவும், உம்மால் வடிவமைக்கப்படத் தயாரானவர்களாகவும் மாற்றும். உம்முடைய வழிநடத்தலை முழுமையாகப் பின்பற்ற உதவிடும்.

2. ஆண்டவரே, எங்களுக்குள் உள்ள அகந்தையை நீக்கிவிடும். பயமும் நடுக்கமும் உடன் எங்கள் இரட்சிப்பை நடத்த உதவிடும். எங்கள் சொந்த மகிமையை நாடாமல், உமது கைகளில் பயன்படும் பாத்திரங்களாக இருக்கத் தயார் செய்க.

3. தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (ASEAN) நாடுகளில் போட்டித்திறனைத் தக்கவைத்துக் கொள்ள மலேசியா வெளிநாட்டு தொழிலாளர்களையும் சுற்றுலாவையும் சார்ந்து இருக்கிறது. குடிவரவு, சுங்கம் மற்றும் விருந்தோம்பல் துறைகளை திறம்பட நிர்வகிக்க சிவில் சேவை (Civil Service) — ஒரு முக்கிய ஆதரவுக் கட்டமைப்பு — திறன் மற்றும் நேர்மையுடன் செயல்பட ஜெபிக்கிறோம்.

# நாள் 21

*வியாழன், 27 ஆகஸ்ட் 2026*

## *தாழ்மையானவர்கள் இளைப்பாறுதலை அனுபவிக்கிறார்கள்*

**"சுமையுற்றும் சோர்ந்தும் இருப்பவர்களே, நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதலை அளிப்பேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் நான் மென்மையும் தாழ்மையும் உள்ள இதயமுடையவன் அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்."**

**மத்தேயு 11:28–29 ஐ வாசிக்கவும்**

இயேசு கிறிஸ்து நம்மை — அவருடைய ஜனங்களை — நம்முடைய ஆத்துமாக்களுக்கு உண்மையான இளைப்பாறுதலைக் கண்டுபிடிக்க அழைக்கிறார். நாம் நம்மால் வாழ்க்கையைச் சமாளிக்க முயன்று சுமந்து கொண்டிருக்கும் கனமான பாரத்தை நிறுத்தி, அவருடைய சமாதானத்தாலும் இலகுவான இதயத்தாலும் நிரம்பிய வாழ்க்கையை ஒவ்வொரு நாளும் வாழ அழைக்கிறார்.

நாம் மென்மையும் தாழ்மையும் உடையவர்களாக இருந்தால், உலகம் எங்கள் ஆத்துமாவின்மேல் ஏற்படுத்தும் நசுக்கும் அழுத்தங்களிலிருந்து விடுதலை பெறுவோம். நாம் இனி இடையறாத ஒப்பீட்டின் சோர்வான பாரத்தையும், லாப நஷ்டங்களை கணக்கிடும் கவலையையும், எங்கள் இதயத்தை குழப்பி எங்கள் சந்தோஷத்தை திருடும் முடிவில்லா போட்டிகளையும் சுமக்க வேண்டியதில்லை. ஆனால் நாம் விடாமல், எங்கள் சொந்த வழியிலேயே செல்லத் துணிந்தால், திருப்தியும் நன்றியுணர்வும் மூலம் மட்டுமே கிடைக்கும் உண்மையான உள்ளார்ந்த சமாதானத்தையும் சந்தோஷத்தையும் இழந்துவிடுவோம்.

நாம் இயேசு கிறிஸ்து ஆண்டவரிடமிருந்து மென்மையையும் தாழ்மையையும் கற்றுக்கொள்வோம். பிதாவின் வாக்குத்தத்தங்களில் உறுதியாக நம்பிக்கை வைத்து, விசுவாசத்தில் இளைப்பாறுவோம். பிதாவின் சந்நிதியில் வாசமிருந்து, அவர் எல்லாவற்றையும் அறிந்தவரென்பதை உணர்வோம் அதனால் நாம் குறைகளைப் பற்றிக் கொண்டு இருக்க வேண்டியதில்லை. நம்பிக்கையற்றதாகத் தோன்றும் சூழ்நிலைகளிலும் கூட, நம்முடைய பரலோகத் தந்தை அனைத்தையும் ஆளும் அரசனாக இருக்கிறார் என்ற உறுதியினால் நாம் சமாதானத்தில் நிலைத்திருக்க முடியும். நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் அவர் ஆண்டவர், தேவன்.

தாழ்மையும் மென்மையும் உடையவர்கள் அவருடைய அன்பில் அமைதியாக இளைப்பாறுகிறார்கள்—பாதுகாப்புடனும், எந்தப் புயல்களுக்கும் தாக்குதல்களுக்கும் அஞ்சாதவர்களாகவும். அவர் எங்கள் இதயங்களை அமைதிப்படுத்தி, எங்களுக்கு இளைப்பாறுதலை அளிக்கிறார்.

"தேவன் எங்கள் அடைக்கலமும் வல்லமையும் துன்பத்தில் எப்போதும் துணையாக இருப்பவர்." (சங்கீதம் 46:1) தாழ்மையும் மென்மையும் நமக்கு உண்மையான இளைப்பாறுதலை அனுபவிக்க உதவுகின்றன் அந்த பாதுகாப்பும் அமைதியிலும் நாம் தேவனுடைய சந்நிதியை அறிந்து, காண்ந்து, அனுபவிக்கிறோம்.

## *இன்றைய ஜெபம்*

1. ஆண்டவரே, எங்கள் நாட்கள் அதிக பிஸியான வாழ்க்கையின் அடக்குமுறையால் நிரம்பும்போது, நாம் இழக்கும் சமாதானம் எவ்வளவு பெரிதென்று உணரச் செய்க. உம்முன் அமைதியாக இருந்து உம்முடைய சத்தத்தை கேட்கும் அந்த மதிப்புமிக்க நேரங்களை மதிக்க கற்றுக்கொடுக்கவும்.

2. ஆண்டவரே, பிறரின் தேவைகளையும் நலன்களையும் முன்னிலைப்படுத்த உதவிடும். இது எங்களைத் தாழ்த்துவதல்ல் மாறாக, நம்மைத் தாண்டி சிந்திக்கவும், பிறரை மனதில் கொள்ளவும் எங்கள் கவனத்தை விரிவாக்குகிறது.

3. மலேசியா தனது உணவு உற்பத்தியை அதிகரிக்க மேலும் முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டியுள்ளது. அதிகமாக இறக்குமதியை சார்ந்து இருக்காமல், எதிர்காலத்திற்காக வெளிநாட்டு கூட்டாளிகளுடன் நிலையான திட்டங்களை அரசு உருவாக்க உதவிடும் என்று ஜெபிக்கிறோம்.

# நாள் 22

வெள்ளி, 28 ஆகஸ்ட் 2026

## *மென்மையானவர்கள் ஒற்றுமையையும் சமாதானத்தையும் பெறுகிறார்கள்*

**ஆதியாகமம் 26:12–33 ஐ வாசிக்கவும்**

“மென்மையானவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந்தரமாகப் பெறுவார்கள்.” (மத்தேயு 5:5)

“உங்கள் மென்மை எல்லாருக்கும் தெரியப்படட்டும்.” (பிலிப்பியர் 4:5)

ஈசாக்கு தாழ்மையும் சமாதானமும் கொண்ட ஒரு சிறந்த முன்மாதிரி. அவர் தனது முன்னோராகிய அபிரகாமுக்கு தேவன் அளித்த ஆசீர்வாதத்தைப் பெற்றவர் அதில் திருப்தியுடனும் பாதுகாப்புடனும் இருந்தார். அவர் தொடர்ந்து அநியாயத்தையும் துன்பத்தையும் சந்தித்தபோதிலும், தாழ்மையானதும் மென்மையானதும் ஆன மனப்பாங்கைத் தக்கவைத்தார். பிலிஸ்தியர் அவரைப் பொறாமைப்படிந்து, அவரது சொத்துக்களை அழித்தபோதிலும், அவர் அந்த அநியாயத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. தாழ்மையில் வேரூன்றியிருந்ததால், அவருக்குச் சொந்தமான நிலத்தையே கூட அவர் மனமுவந்து விட்டுக்கொடுக்கத் தேர்ந்தெடுத்தார்.

ஈசாக்கு ஒருபோதும் மனம் உடையவனாகவோ கைவிடுபவனாகவோ ஆகவில்லை. அவர் கிணறுகளை மீண்டும் தோண்டினார் அவை மீண்டும் பறிக்கப்பட்டபோதும் சண்டையிடாமல், இன்னொரு கிணற்றை தோண்டினார். ஈசாக்கின் தாழ்மையான கீழ்ப்படிதல் இறுதியில் வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றத்துக்குக் கொண்டு வந்தது: “இப்போது கர்த்தர் எங்களுக்கு இடம் செய்தார் நாம் இந்த நாட்டில் பலப்படுவோம்.” போட்டி செய்ய மறுத்தும், மென்மையுடன் நிலைத்திருந்ததாலும், அவருக்கு இன்னும் விசாலமான இடமும் அதிகமான வளர்ச்சியும் கிடைத்தது.

ஈசாக்கு மூலம், மக்கள் அவரது தேவனையும் அவரது விசுவாசத்தையும் கண்டார்கள். தாழ்மையும் சமாதானத்தையும் நேசிப்பவர்கள், “தேவனை நம்புகிறவர்களுக்கு இதயத்தில் சமாதானம் உண்டு அவர்கள் சமாதானத்தின் பிள்ளைகள்” என்பதை பிறர் காணும்படி வாழ்கிறார்கள். அபிமேலேக் ஈசாக்கிடம், “கர்த்தர் உம்மோடிருக்கிறார் என்பதை நாங்கள் தெளிவாகக் கண்டோம்” (வசனம் 28) என்று கூறி, அவருடன் சமாதான உடன்படிக்கை செய்தான்.

தேவன் தாமே ஈசாக்கு அவருக்குத் தோன்றி, அவரை மிகுந்த ஆசீர்வாதங்களால் ஆசீர்வதிப்பேன் என்று வாக்குத்தத்தம் அளித்தார்.

மென்மையானவர்கள் உள்ளார்ந்த சமாதானத்தை உடையவர்கள். அவர்கள் துன்பங்களின் நடுவிலும் நிலைத்திருக்கிறார்கள் அவர்கள் இருக்கும் இடமெல்லாம் வாழ்க்கை வளமாக வளர்கிறது.

## *இன்றைய ஜெபம்*

1. ஆண்டவரே இயேசு கிறிஸ்து, இன்று நான் சண்டையையும் போட்டியையும் விட பொறுமையையும் தயவையும் தேர்ந்தெடுக்கிறேன். உங்கள் இரக்கத்தையும் தாராளத்தையும் புரிந்து வாழ என் மனத்தையும் இதயத்தையும் விசாலமாக்கும்.

2. ஆண்டவரே, இருளில் பிரகாசிக்கும் சமாதானத்தை நேசிக்கும் தாழ்மையை எங்களுக்கு அளிக்கவும். நம்மை முன்னிறுத்துவதற்காக அல்ல, நம்மையே மறுத்து கிறிஸ்துவில் வாழ்வதினால் அது வெளிப்படட்டும். “சமாதானம் செய்வோர் பாக்கியவான்கள் அவர்கள் தேவனுடைய புத்திரர்கள் எனப்படுவார்கள்.” (மத்தேயு 5:9)

3. சமூக ஊடகங்களில் வெறுப்பு பேச்சு அதிகரித்து, இனங்களுக்கிடையே மோதல்களை உருவாக்குகிறது. கருத்து வேறுபாடுகளை சமரசம் செய்யவும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தவும் கடினமாகியுள்ளது. இதற்காக தகுந்த கட்டுப்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று ஜெபிக்கிறோம்.

# *தாழ்மையானவர்கள் ஞானமுள்ளவர்கள்*

**சங்கீதம் 131 ஐ வாசிக்கவும்**

“மென்மையானவர்கள் தேசத்தைச் சுதந்தரமாகப் பெற்று, மிகுந்த சமாதானத்தில் மகிழ்வார்கள்.” (சங்கீதம் 37:11)

தேவனுக்கு முன்பாக தாழ்மையான மனப்பாங்கு கொண்டவர், அவருடைய பரம அதிகார சித்தம் உயர்ந்ததென்பதையும், அவருடைய திட்டங்கள் ஆழமானவையாக இருப்பதையும் உணர்கிறார். அகந்தையாலும் உயர்ந்த பார்வையாலும் நிறைந்த இதயம், தேவனை காணும் பார்வையை மறைத்துவிடுகிறது் இதனால் ஆத்துமா குழப்பத்திலும் வழிதவறுதலிலும் விழுகிறது.

உண்மையாகத் தாழ்மையானவர்கள் தேவனை எதிர்நோக்கி பொறுமையுடன் காத்திருக்கிறார்கள். அவர்களின் புரிதலைத் தாண்டிய பெரிய விஷயங்களைச் சந்திக்கும் போது, அவர்கள் அவசரமாகச் செயல்பட மறுக்கிறார்கள். தேவனுடைய வழிநடத்தலைப் பொருட்படுத்தாமல் தன்னிச்சையாக நடப்பது, பலனற்ற முயற்சிகளின் சுழற்சியிலும் ஆழ்ந்த மனச்சோர்விலும் முடிவடைகிறது.

தாழ்மையானவர்கள் சரணாகதி மனதுடன் தாழ்ந்து, ஆண்டவரோடு தங்களை ஒத்திசைத்து, அவருடைய சந்நிதியில் தங்குகிறார்கள். இதன் விளைவாக, அவர்களின் இதயங்கள் அமைதியாகவும் சமாதானமாகவும் ஆகின்றன. ஆண்டவரில் உறுதியாக இருப்பவர்கள் ஆவியில் மென்மையானவர்களாகவும், பார்வையில் தெளிவுடையவர்களாகவும் இருப்பார்கள்.

தாழ்மையானவர்கள் தேவனை நோக்கிப் பார்க்கிறார்கள் ஆகையால் அவர்கள் உயரமாகவும் தூரமாகவும் காண்கிறார்கள்.
தாழ்மையானவர்கள் ஞானமுள்ளவர்கள்.

## *இன்றைய ஜெபம்*

1. ஆண்டவரே, எங்கள் கண்களை உம்மிடத்தில் உயர்த்தும்போது, உமது மகத்துவத்தை ஒரு சிறு அளவாவது காண உதவிடும். இயேசு கிறிஸ்து அவருடைய நிறைவுற்ற கிரியைக்கு அப்பால், எங்கள் அகந்தையாலும் பலவீனமான முயற்சிகளாலும் உமது அங்கீகாரத்தைப் பெற முயலுகிற மனப்பாங்கை நீக்கிவிடும்.

2. ஆண்டவரே, எங்கள் கருத்துகளையும் உணர்ச்சிகளையும் பகிரும்போது, எங்கள் நோக்கங்களை சோதிக்க உதவிடும். நாம் எவ்வளவு பெரியவர்கள் என்பதை காட்டுவதற்காக அல்ல, உமது சத்தத்தை கேட்டு, அன்பை வெளிப்படுத்தி, ஒற்றுமையை வளர்க்க உதவிடும்.

3. மலேசிய ஒப்பந்தம் 1963 (MA63) தொடர்பாக சபா மற்றும் சரவாக் மாநிலங்களின் உரிமைகளும் வளங்களும் குறித்து நடைபெறும் விவாதங்கள் இன்னும் தீர்மானமான முடிவுகளைக் காணவில்லை. அடுத்த இரண்டு ஆண்டுகளில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் (GE16) முன்னிட்டு, அனைத்து தரப்புகளுக்கும் நல்ல முன்னேற்றம் உருவாக தேவையான ஞானத்தை அருளிடும் என்று ஜெபிக்கிறோம்.



# தாழ்மைக்கு தடைகள்

## வாரம் 4

# நாள் 24

*ஞாயிறு, 30 ஆகஸ்ட் 2026*

## *சுயபோதையின் பெருமை*

**உபாகமம் 8:17–18, யோவான் 15:5 வாசிக்கவும்**

தாழ்மையின் மிகவும் நுட்பமான எதிரிகளில் ஒன்று சுயபோதையான மனப்பான்மை — வாழ்க்கை, முன்னேற்றம் மற்றும் பலன்கள் அனைத்தும் நம்முடைய சொந்த வலிமையால் தாங்கப்பட்டுள்ளன என்ற நம்பிக்கை. செழிப்பு அமைதியாக நினைவுகளை மாற்றி, இருதயம் "என் சக்தியும் என் கைகளின் வலிமையும் இதை உருவாக்கின" என்று சொல்லும் நிலைக்கு கொண்டு செல்லும் என்று மோசே இஸ்ரவேலருக்கு எச்சரித்தார் (உபாகமம் 8:17).

இந்த வகையான பெருமை பெரும்பாலும் வெளிப்படையாக இருக்காது. அது திறமை, அனுபவம் மற்றும் வெற்றியின் பின்னால் மறைந்து காணப்படும். இயேசு இந்த மாயையை தெளிவாக வெளிப்படுத்துகிறார்: "என்னை விட்டுப் பிரிந்து நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது" (யோவான் 15:5). நம்முடைய சுவாசம், ஞானம், சகிப்பு, மற்றும் ஆவிக்குறிய பலன் ஆகியவை நம்மால் உருவாக்கப்படுபவை அல்ல் அவை தேவனுடைய கிருபையால் தாங்கப்படுகின்றன என்பதை அவர் நினைவூட்டுகிறார்.

சுயபோதையான மனப்பான்மை மெதுவாக ஜெபத்தை மாற்றி விடுகிறது. தேவனை சார்ந்திருப்பதற்கு பதிலாக கட்டுப்படுத்தும் எண்ணம் வருகிறது நெருக்கமான உறவிற்கு பதிலாக செயல்பாடுகள் முன்னிலையாகின்றன. காலப்போக்கில் இது சோர்வு, ஆவிக்குறிய மந்தம் மற்றும் தேவனிடமிருந்து அமைதியான விலகலை உருவாக்குகிறது.

சுயபோதையை நாம் எப்படி வெல்லலாம்?

தேவனைச் சார்ந்திருக்கும் வாழ்க்கையில் நம்மை திட்டமிட்டு மீண்டும் நிலைநிறுத்துவதன் மூலம் இதை வெல்லலாம். உண்மையான தாழ்மை என்பது நம்மை குறைத்து நினைப்பது அல்ல் தேவனை சரியாக நினைவில் கொள்ளுவதே ஆகும்.

அப்போது ஜெபம் அவசர நேரத்தில் மட்டும் செய்யும் ஒன்றாக இல்லாமல், அவருடைய சித்தத்துடன் தொடர்ச்சியான ஒத்திசைவாக மாறுகிறது. உபவாசத்தின்போது, நாம் கட்டுப்பாட்டின் மாயையை எதிர்கொண்டு, தேவனுடைய தாங்கும் கிருபையை தினமும் சார்ந்திருக்கும் வாழ்க்கைக்குத் திரும்புகிறோம்.

## *இன்றைய ஜெபம்*

1. "கர்த்தாவே, உம்மின்றி நான் எதையும் செய்ய முடியாது என்பதை உணரச் செய்யும். என் சொந்த வலிமையை அல்ல, உமது கிருபையைச் சார்ந்து வாழ கற்றுகத்தாரும். என் சுயநம்பிக்கையை நீக்கி, உம்மை சார்ந்திருக்கும் மனதை அளிக்கவும். இயேசுவின் நாமத்தில், ஆமென்."

2. "கர்த்தாவே, சுயநலமும், பொறாமையும், போட்டியுணர்ச்சியும் என் இருதயத்தை ஆளாதபடி காக்கும். பிறரின் வெற்றியை வெறுக்காமல், உண்மையான உறவுகளை உம்மோடும் மனிதர்களோடும் காக்க உதவி செய்க. ஆமென்."

3. அரசு மக்களிடம் அளித்துள்ள மாற்றங்களைக் நிறைவேற்ற குறைந்த காலமே உள்ளது. பலவீனமான கூட்டணியின் நடுவிலும், 2027 பொதுத் தேர்தலை முன்னிட்டு அரசியல் சமரசங்களுக்கு இடமளிக்காமல் பிரதமர் ஞானத்துடன் செயல்பட ஜெபிப்போம்.

## *மறந்து விடாதிருப்போம்*

**சங்கீதம் 90:9-10, எரேமியா 29:10, தானியேல் 9:2, லூக்கா 10 வாசிக்கவும்**

அறுபத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு, Tunku Abdul Rahman அவர்களின் தலைமையில், எங்கள் முன்னோர்கள் கோலாலம்பூரில் உள்ள மெர்டேகா ஸ்டேடியத்தில் கூடிக் கொண்டு "மெர்டேகா!" என்று ஏழு முறை முழங்கினர். இது புதியதாக உருவாகிய சுதந்திரமான கூட்டமைப்பான மலாயாவின் அறிவிப்பாக இருந்தது. சுதந்திரம், ஒற்றுமை மற்றும் ஒவ்வொரு குடிமகனுக்கும் நீதி மற்றும் உடன்பிறப்பை உறுதிபடுத்தும் சமூகத்தின் வாக்குறுதியை தாங்கியதாக இருந்தது. 1963 ஆம் ஆண்டில் சபா மற்றும் சரவாக் சமமான பங்குதாரர்களாக இணைந்து மலேசியா என்ற நாட்டை உருவாக்கின.

அடுத்த ஆண்டு மலேசியா தனது சுதந்திரத்தின் 70வது ஆண்டில் நுழைகிறது. வேதாகமத்தில் 70 என்ற எண் நிறைவு, பூர்த்தி மற்றும் தீர்ப்பை குறிக்கிறது. மனிதனின் ஆயுள் முழுமையை குறிக்கும். 70 ஆண்டுகள் என்று மோசே எழுதியுள்ளார் (சங்கீதம் 90:9,10) 70 ஆண்டுகளுக்குப் பிறகு இஸ்ரவேல் சிறைவாசத்திலிருந்து திரும்புவார்கள் என்று தேவன் வாக்குத்தத்தம் அளித்தார் (எரேமியா 29:10 தானியேல் 9:2) மேலும், கிறிஸ்து நோயாளிகளை சுகப்படுத்தவும் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கவும் 70 சீஷர்களை அனுப்பினார் (லூக்கா 10). நமது நாடு இந்த முக்கியமான ஆண்டை கொண்டாடும் வேளையில், நமது தாழ்மையான ஆரம்பங்களையும், தொலைந்திருந்த ஒரு பின்தங்கிய நிலைமையிலிருந்து இன்று நாம் வந்த நிலைக்கு இந்த நாட்டை கட்டியெழுப்பிய முன்னோர்களின் பங்களிப்பையும் மறந்துவிடாமல் இருப்போம்.

இன்று மலேசியா தனித்துவமான உருவாக்கத்தைக் கொண்ட சுயாட்சி நாடாக நிற்கிறது. நடுத்தர யுகத்தின் இறுதியில் பரபரப்பான வர்த்தக மையமாக இருந்த நாம், பின்னர் காலனித்துவ நிலையமாகவும், இன்று செழுமையான கலாச்சார பல்வகைத் தன்மை மற்றும் வரலாற்று முக்கியத்துவத்திற்காக போற்றப்படும் நவீன நாட்டாகவும் வளர்ந்துள்ளோம். ஆனால் தேசமாக உருவாகிய பாதை நீண்டதும் சவால்களாலும் நிறைந்ததும் ஆகும். ஒவ்வொரு மலேசியரும் நமது நாட்டை அடையாளமாகக் கொண்டு நல்ல அர்த்தத்தில் பெருமைப்படலாம் இருப்பினும் தாழ்மையும் மென்மையான மனப்பான்மையும் தேசிய ஒற்றுமைக்கு அவசியமானவை என்பதை நாமறிகிறோம்.
விசுவாசிகளாகிய நாம், மெர்டேகாவை வெளிப்படுத்தும் விதத்தில் பல்வேறு இனங்கள், கலாச்சாரங்கள் மற்றும் மதங்களைச் சேர்ந்த மக்களிடையே கிறிஸ்துவின் தாழ்மையை முன்மாதிரியாக காட்ட நினைவூட்டப்படுகிறோம்.

## *இன்றைய ஜெபம்*

1. மலேசியாவில் பிறந்து வளர்ந்ததற்காக தேவனுக்கு நன்றி சொல்லுங்கள். மலேசியர் அல்லாதவர்கள் இந்நாட்டில் வாழ்ந்து அதன் நன்மைகளையும் அன்பையும் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புக்காக நன்றி சொல்லுங்கள்.

2. மெர்டேகாவிற்கு முன்பே இருந்த மலேசிய திருச்சபைக்காக ஜெபிப்போம். நம் குறைகளுக்காக மனந்திரும்பி, திருச்சபை மீது ஆண்டவரின் கிருபையும் இரக்கமும் நிறைய, அவர் மகிழும் மணவாட்டியாக நாம் வளர ஜெபிப்போம்.

3. அண்டை நாடுகளுடன் ஒப்பிடும்போது நமது நாடு முன்னேறியிருக்கிறது. இருப்பினும் அலட்சியமும் சோம்பேறித்தனமும் இல்லாமல், பின்தங்காமல், ஆசீர்வாதமுள்ள “பாலும் தேனும் ஓடும் தேசமாக” மலேசியா நிலைக்க ஜெபிப்போம்.

## *மனிதர்களின் பயம்*

**நீதிமொழிகள் 29:25 கலாத்தியர் 1:10**

பெருமை எப்போதும் அகந்தையாகத் தோன்றாது. அது பல நேரங்களில் பிறரின் அங்கீகாரத்தை நாடும் மனப்பான்மையாக மறைந்து காணப்படும். வேதாகமம் இதை மனிதரின் பயம் என்று அழைக்கிறது. தேவனுக்குச் கீழ்ப்படிவதற்குப் பதிலாக, மனிதர்களின் பாராட்டை அடிப்படையாகக் கொண்டு நமது தேர்வுகளை அமைத்துக் கொள்வதாகும்.

“மனுஷனைப் பயப்படுவது கண்ணியாகும்” என்று நீதிமொழிகள் எச்சரிக்கிறது (நீதிமொழிகள் 29:25). அங்கீகாரம் முக்கியமாக மாறும்போது, தாழ்மை வெளிப்பாட்டு நடிப்பாக மாறிவிடுகிறது. நம்பிக்கைகள் மாற்றப்படுகின்றன, கீழ்ப்படிதல் தேர்வாகிவிடுகிறது, உண்மைக்குப் பதிலாக கைதட்டலால் விசுவாசம் அளக்கப்படுகிறது.

பவுல் தெளிவாகச் சொல்கிறார்: “நான் இன்னும் மனிதரைப் பிரியப்படுத்துகிறவனாக இருந்தால், கிறிஸ்துவின் ஊழியக்காரனாக இருக்க மாட்டேன்” (கலாத்தியர் 1:10). மனிதரைப் பயப்படுவது தாழ்மை அல்ல் அது தவறான பற்றுக்கோள். உண்மையான தாழ்மை, எல்லா குரல்களுக்கும் மேலாக தேவனைப் பயபக்தியுடன் மதிப்பதில் இருந்து வருகிறது.

மனிதரின் பயத்தை எப்படி வெல்லலாம்?

கிறிஸ்துவில் நமது அடையாளத்தை மீண்டும் மையப்படுத்துவதன் மூலம் இதை வெல்லலாம். நாம் யாருக்குச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்தால், எல்லோருக்கும் ஏற்றவர்களாக இருக்க வேண்டிய அவசியம் இருக்காது. கர்த்தருக்கான பயபக்தி தைரியம், தெளிவு மற்றும் கீழ்ப்படிதலை சரியாக ஒழுங்குபடுத்துகிறது. உபவாசம் போட்டியிடும் குரல்களை அமைதிப்படுத்தி, தேவனுடைய அதிகாரத்தை நமது வாழ்க்கையின் மையத்தில் மீண்டும் நிலைநிறுத்துகிறது.

## *இன்றைய ஜெபம்*

1. "கர்த்தாவே, மனிதர்களைப் பிரியப்படுத்தும் மனப்பான்மையிலிருந்து என்னை விடுவியுங்கள். உம்மை சரியாகப் பயப்பட கற்றுக்கொடுங்கள். மனிதரின் கருத்தைப் பற்றிய பயத்தையும் அங்கீகாரத் தேவையையும் உமக்கு ஒப்புக்கொள்கிறேன். உமது அன்பிலும் சத்தியத்திலும் என் அடையாளத்தை நிலைநிறுத்துங்கள். எந்த விலையும் இருந்தாலும் உமக்கு கீழ்ப்படிதலுக்கு தைரியம் தாரும். இயேசுவின் நாமத்தில், ஆமென்."

2. இயேசுவே வாழ்க்கையின் மூலமாக இருப்பவர் நாமோ அவருடன் இணைந்த கிளைகள் போன்றவர்கள் (யோவான் 15:5). அவரோடு ஆழ்ந்தும் தொடர்ச்சியான உறவு இருக்க ஜெபிப்போம். அவரைச் சாராமல் நாம் எதையும் செய்ய முடியாது.

3. அரசியல் நிதி சட்டம் மற்றும் சட்டத்துறை அதிகாரப் பிரிப்பு போன்ற முக்கிய திருத்தங்கள் நடைமுறைப்படுத்த தைரியமும் ஞானமும் அரசுக்கு கிடைக்க ஜெபிப்போம்.

## *ஆவிக்குரிய ஒப்பீடு*

**லூக்கா 18:9–14, 2 கொரிந்தியர் 10:12**

ஒப்பீடு தாழ்மையை விரைவாகக் குறைக்கும். பரிசேயரும் வரிவசூலிப்பவரும் பற்றிய உவமையில், ஒருவர் மற்றவர்களுடன் தன்னை ஒப்பிட்டார் மற்றவர் தேவனுக்கு முன் நேர்மையாக நின்றார். நீதிமானாக்கப்பட்டு சென்றது ஒருவரே.

ஒப்பீடு நம்மை தேவனை நோக்காமல், பிறரை நோக்கச் செய்கிறது. மேலானவர்கள் என்று எண்ணினால் பெருமை குறைவானவர்கள் என்று எண்ணினால் மனச்சோர்வு, இரண்டும் தேவனை அல்ல, நம்மையே மையப்படுத்துகின்றன. உண்மையான தாழ்மை, பிறருடன் ஒப்பிடுவதில் அல்ல் தேவனுக்கு முன் உண்மையாக நிற்பதில் உள்ளது.

ஒப்பிடும் மனதை எப்படி வெல்லலாம்?

நேர்மையான ஜெபத்திற்குத் திரும்புவதன் மூலம். “தேவனே, என்மேல் இரக்கம் கொள்ளும்” என்ற மனந்திரும்பும் ஜெபம் தாழ்மையை மீட்டெடுக்கிறது. கிருபை நமது அளவுகோலாக மாறும்போது, ஒப்பீடு அதன் பிடியை இழக்கிறது. உபவாசம் வெளிப்புற அளவுகோல்களை நீக்கி, தேவனை மட்டும் நோக்கி திரும்பச் செய்கிறது.

## *இன்றைய ஜெபம்*

1. “கர்த்தாவே, பிறருடன் என் பயணத்தை ஒப்பிடும் மனத்திலிருந்து என்னை விடுவியுங்கள். எனக்கு கொடுத்த அழைப்பில் விசுவாசமாக நடக்க கற்றுக்கொடுங்கள். பெருமை, பொறாமை, பாதுகாப்பின்மை ஆகியவற்றிலிருந்து என் இருதயத்தை சுத்திகரிக்கவும். பிறருக்கு எதிராக அல்ல, உம்முன் உண்மையாக நிற்க உதவி செய்க. உமது கிருபையால் என்னை வடிவமைக்கவும். இயேசுவின் நாமத்தில், ஆமென்.”

2. பெருமை தாழ்மைக்கு முக்கிய தடையாக உள்ளது. சுயநலம், அகந்தை, புகழ் தேடுதல் ஆகியவற்றை உணர்ந்து, ஆண்டவர் வைத்த ஓட்டத்தில் நிலைத்திருக்க ஜெபிப்போம்.

3. பொருளாதார சவால்கள் இருந்தாலும், நிதி பற்றாக்குறையை குறைக்க தைரியமும் ஞானமும் நிதி அமைச்சகத்திற்கு கிடைக்க ஜெபிப்போம்.

## *கற்றுகொள்ளாத மனப்பான்மை*

**நீதிமொழிகள் 12:15, யாக்கோபு 1:21**

பெருமை பல நேரங்களில் கற்றுக்கொள்ளாத மனப்பான்மையாக வெளிப்படும். இப்படிப்பட்ட இருதயம் திருத்தத்தை ஏற்காது, ஆலோசனையை விரும்பாது, தானே போதுமானவன் என்ற எண்ணத்தில் இருக்கும். ஆனால் யாக்கோபு, தேவனுடைய வார்த்தையை தாழ்மையுடன் ஏற்குமாறு அழைக்கிறார். கற்றுக்கொள்ளும் மனம் பலவீனம் அல்ல் அது ஆன்மீக வலிமை.

கற்றுக்கொள்ளாத மனதை எப்படி வெல்லலாம்?

கேட்கத் தயாரான மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதன் மூலம். “கர்த்தாவே, நான் காணாததை எனக்குக் காட்டும்” என்று ஜெபிக்கும் தாழ்மை தேவையானது. நோன்பு மனதை மென்மையாக்கி, தேவனுடைய வார்த்தை நம்மை திருத்தி மாற்ற இடமளிக்கிறது.

## *இன்றைய ஜெபம்*

1. “கர்த்தாவே, என் இருதயத்தை மென்மையாக்கும். மீண்டும் கற்றுக்கொள்ளும் மனதை அளியுங்கள். பரிசுத்த ஆவியே, என் எதிர்ப்பை அமைதிப்படுத்தி, கேட்கும் செவியும் திருத்தத்தை ஏற்கும் இருதயமும் தாரும். உபதேசத்தையும் சத்தியத்தையும் எதிர்க்கும் பெருமையை நீக்கி, கீழ்ப்படிதலுள்ள கற்றுக்கொள்ளும் ஆவியை உருவாக்கும். இயேசுவின் நாமத்தில், ஆமென்.”

2. மனிதரிடமிருந்து வரும் புகழை அல்ல, தேவனிடமிருந்து வரும் மகிமையை நாடும் மனம் நமக்குள் உருவாக ஜெபிப்போம் (யோவான் 5:44).

3. உலக பொருளாதார சவால்கள் இருந்தாலும், முக்கிய திருத்தங்களை ஞானத்துடன் நடைமுறைப்படுத்த அரசு தெளிவான முடிவுகளை எடுக்க ஜெபிப்போம்.

## கசப்பும் மன்னிக்காத மனமும்

**மத்தேயு 18:21–35, எபேசியர் 4:31–32**

பெருமை பல நேரங்களில் கசப்பும் மன்னிக்காத மனத்திலும் மறைந்து வாழ்கிறது. மன்னிக்காத மனம், "நான் இதைவிட சிறந்ததை பெற வேண்டியவன்" என்று அமைதியாகச் சொல்லுகிறது. நாம் பெற்ற கிருபையை நினைவில் கொள்ளும் போது தாழ்மை வளர்கிறது் மன்னிப்பு நம்மை சிலுவையின் சமநிலைக்கு திரும்பக் கொண்டுவருகிறது.

மன்னிக்காத மனதை எப்படி வெல்லலாம்?

சிலுவைக்கு தினமும் திரும்புவதன் மூலம். மன்னிப்பு உடனடி ஒன்றாக இல்லாமல் தொடர்ச்சியான ஒப்புக்கொடுத்தல். நோன்பின் போது உள்ள காயங்கள் வெளிப்படும் தண்டிக்க அல்ல, குணப்படுத்த. நாம் மீண்டும் மீண்டும் கிருபையைத் தேர்ந்தெடுக்கும் போது தாழ்மை வளர்கிறது.

## இன்றைய ஜெபம்

1. "கர்த்தாவே, என்னை காயப்படுத்தியவர்களை நான் விடுவிக்கிறேன். என் கசப்பு, வேதனை, தீராத காயங்களை உம்முன் வைக்கிறேன். கிறிஸ்துவில் நீர் என்னை மன்னித்ததுபோல், மற்றவர்களை மன்னிக்க நான் தேர்ந்தெடுக்கிறேன். என் இருதயத்தை குணமாக்கி, கசப்பிலிருந்து என்னை விடுவித்து, தாழ்மையை மீட்டெடுக்கவும். இயேசுவின் நாமத்தில், ஆமென்."

2. நாம் பிறரை மன்னிக்கும் போது தேவனுடைய இரக்கத்தைக் காட்டுகிறோம் (மத்தேயு 6:14–15). மன்னிக்கும் மனதை நமக்குள் வளர்த்தருள ஜெபிப்போம்.

3. உலக பொருளாதார மாற்றங்களால் வேலைவாய்ப்பு சவால்கள் வரக்கூடும் நமது நாட்டின் தலைவர்களுக்கு ஞானமும் சரியான தீர்மானமும் கிடைக்க ஜெபிப்போம்.

## *சிலுவையை மறந்து விடுதல்*

**பிலிப்பியர் 2:5–8, 1 கொரிந்தியர் 1:18**

தாழ்மைக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் சிலுவையை மறந்து விடுதலாகும். சிலுவை நம்முடைய இரட்சிப்பு சாதனையால் அல்ல, கிருபையால் கிடைத்தது என்பதை நினைவூட்டுகிறது. சிலுவை மறைந்தால், செயல்திறன் பெருகும் கிருபை மறைந்தால், பெருமை திரும்பும்.

இதைக் எப்படி வெல்லலாம்?

இயேசுவை நோக்கி நமது கண்களை நிலைநிறுத்துவதன் மூலம். தினமும் ஒப்புக்கொடுத்தல், கீழ்ப்படிதல் மற்றும் அன்பின் வாழ்க்கை தாழ்மையை வளர்க்கிறது. உபவாசம் சிலுவையை நமது வாழ்க்கையின் மையமாக மீண்டும் நிலைநிறுத்துகிறது.

## *இன்றைய ஜெபம்*

1. “இயேசுவே, உமது சிலுவையால் என் வாழ்க்கையை வடிவமைக்கவும். நான் கிருபையால் இரட்சிக்கப்பட்டவன் என்பதை நினைவூட்டும். உமது தாழ்மை, கீழ்ப்படிதல் மற்றும் அன்பின்படி வாழ கற்றுக்கொடுங்கள். சிலுவையின் வழி என் வாழ்க்கையின் வழியாக இருக்கட்டும். இயேசுவின் நாமத்தில், ஆமென்.”

2. நம்முடைய வெற்றி சுயநம்பிக்கையை உருவாக்காமல், தேவனுடைய கிருபையை நினைவில் வைத்து அவருக்குச் சிறந்த சேவை செய்ய உதவி கேட்போம். சிலுவையை மறந்துவிடாதபடி ஜெபிப்போம்.

3. கடந்த கால நிர்வாக குறைகளிலிருந்து கற்றுக்கொண்டு, எதிர்காலத்தில் பொறுப்புணர்வுடன் நல்ல ஆட்சி நிலைக்க தலைவர்களுக்கு ஞானம் கிடைக்க ஜெபிப்போம்.



# திருச்சபையில் தாழ்மையின் வெளிப்பாடு

## வாரம் 5

# *தலைமைத்துவ நெருக்கடி மற்றும் தாழ்மைக்கான அழைப்பு*

**சங்கீதம் 139:23–24** ***ஐ வாசிக்கவும்***

திருச்சபையின் வாழ்க்கையில், தலைவர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகள் கிறிஸ்து ஜெபித்த ஒற்றுமையைச் சோதிக்கும் தருணங்களாக இருக்கும். சில ஆண்டுகளுக்கு முன்பு, நான் இப்படிப்பட்ட ஒரு காலத்தை எதிர்கொண்டேன். முறையான செயல்முறையின் மூலம் எனக்கு மூத்த தலைமைப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டபின், சில இணை ஊழியர்கள் கவலை வெளியிட்டு, என் தொடர்ந்த சேவைக்கு எதிராக தீவிரமான சவால்களை முன்வைத்தனர்.

அந்த வேதனையான அழுத்தமான தருணத்தில், உண்மையான தலைமை என்பது பதவியையோ பெயரையோ காப்பதல்ல் கிறிஸ்துவின் தாழ்மையை பிரதிபலிப்பதே என்பதை கர்த்தர் மென்மையாகவும் உறுதியாகவும் எனக்கு நினைவூட்டினார். ஏமாற்றத்துடன் அல்லது கட்டுப்படுத்தும் மனப்பான்மையுடன் எதிர்வினையாற்றாமல், நான் அடக்கமும் திறந்த மனமும் கொண்டு, தேவனுடைய செயல்முறைகளிலும் மக்களிலும் நம்பிக்கை வைத்து நடக்கும் பாதையைத் தேர்ந்தெடுத்தேன்.

இந்த அனுபவம் தாழ்மையைப் பற்றிய என் புரிதலில் ஒரு திருப்புமுனையாக மாறியது. அது பலவீனம் அல்ல் தேவனுடைய திருச்சபைக்காக, அவருடைய வழிகளுக்கு நம்மை நோக்கமுடன் ஒப்புக்கொடுத்தல் என்பதே தாழ்மை என்பதை நான் அறிந்தேன்.

இந்த வாரம், தலைவர்களும், ஒவ்வொரு விசுவாசியும், கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் விதத்தில் கருத்து வேறுபாடுகளை சமாளிக்க உதவும் தாழ்மையின் நான்கு வெளிப்பாடுகளைப் பற்றி நாம் சிந்திப்போம்.

**சிந்தித்து பாருங்கள்:**

தாழ்மையைத் தேர்ந்தெடுத்ததால் உங்கள் திருச்சபையிலோ அல்லது குடும்பத்திலோ சமாதானம் காக்கப்பட்ட ஒரு தருணத்தை நீங்கள் அனுபவித்துள்ளீர்களா?

## *இன்றைய ஜெபம்*

1. கர்த்தாவே, எங்கள் திருச்சபைகளில் உள்ள ஒவ்வொரு இருதயத்தையும் ஆராய்ந்து, பெருமையை நீக்கி, உமது சுத்திகரிக்கும் கிருபை தேவைப்படும் இடங்களை வெளிப்படுத்தும்.

2. மலேசிய திருச்சபை தலைவர்கள் ஒவ்வொரு கருத்து வேறுபாட்டிலும் கிறிஸ்துவைப் போன்ற தாழ்மையை முன்மாதிரியாக காட்டி, எங்கள் ஒற்றுமையை உலகம் கண்டு விசுவாசிக்கும்படி ஜெபிப்போம் (யோவான் 17:21).

3. பல இன, பல மத நாடான மலேசியாவில் சமாதானமும் ஒற்றுமையும் நிலைக்க, மத சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் அரசியலமைப்பை அரசு காக்க ஜெபிப்போம்.

# நாள் 32

*திங்கள், 7 செப்டம்பர் 2026*

## *உடனடி எதிர்வினையை தவிர்த்து — என் இருதயத்தை ஆராய தேவனை அனுமதித்தல*

**சங்கீதம் 139:23–24** ***ஐ வாசிக்கவும்***

"தேவனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும் என்னைச் சோதித்து என் கலங்கும் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். என்னுள் தீய வழி ஏதாவது இருக்கிறதா என்று பார்த்து, நித்திய வழியில் என்னை நடத்தும்."

நாம் சேவை செய்கிறவர்களிடமிருந்தே விமர்சனமோ தவறான புரிதலோ வரும்போது, உடனே விளக்கவும் திருத்தவும் அல்லது நம்மை நாமே பாதுகாக்கவும் மனம் தேவைப்படுகிறது. ஆனால் தாழ்மை நம்மை சிறிது நிற்கவும் அமைதியாக இருக்கவும் அழைக்கிறது.

நான் அனுபவித்த அந்த கருத்து வேறுபாட்டு காலத்தில், உடனடி பதில்களை அளிக்காமல் அமைதியாக இருக்க பரிசுத்த ஆவி என்னை உந்தினார். அதற்குப் பதிலாக, என் மனப்பான்மை, தீர்மானங்கள் அல்லது தொடர்பு முறைகளில் அறியாமலாவதாகும். இந்த பதட்டத்திற்கு காரணமான ஏதேனும் இருந்ததா என்பதை என் இருதயத்தை ஆராய தேவனை நான் அமைதியாக வேண்டிக்கொண்டேன்.

தேவனுக்கு முன் உள்ளார்ந்த அமைதியுடன் நின்ற இந்த மனப்பான்மை ஒரு வரமாக மாறியது. குற்றச்சாட்டுகள் முழுமையாக சரியானவை அல்லாத போதிலும், அவர் குணமாக்குதலையும் தெளிவையும் அளிக்க இடமளித்து தேவனை நம்மை ஆராய அனுமதிக்கும் போது தான் தாழ்மை ஆரம்பமாகிறது.

**சிந்தித்து பாருங்கள்:**

இன்று நீங்கள் பதிலளிப்பதற்கு முன், சிறிது நிற்கவும் உங்கள் இருதயத்தை தேவன் ஆராய அனுமதிக்கவும் அவர் உங்களை அழைக்கும் ஏதேனும் சூழ்நிலை இருக்கிறதா?

## *இன்றைய ஜெபம்*

1. பிதாவே, நான் தாக்கப்படுகிறேன் என்று உணரும் போது என் இருதயத்தை அமைதிப்படுத்தி என்னை ஆழமாக ஆராய்ந்து சமாதானத்தின் வழியில் நடத்தும். விமர்சனங்களை எதிர்கொள்ளும் மலேசியா முழுவதும் உள்ள தலைவர்கள் தற்காப்பாக அல்ல, தாழ்மையுடன் பதிலளிக்க கிருபை பெற ஜெபிப்போம்.

2. மனிதரின் இயல்பான விருப்பங்கள் தேவனால் கொடுக்கப்பட்ட நல்ல நோக்கத்திற்காக இருந்தாலும், அவை சரியான முறையில் வெளிப்படட்டும். நமது சுயநல நோக்கங்கள் பிறருக்கு இடறலாக இல்லாமல் இருக்க ஜெபிப்போம்.

3. பல மத தலைவர்களுக்கிடையே பரஸ்பர மரியாதையும் புரிதலும் வளரட்டும். இவ்வாறு முயற்சிக்கும் போது மட்டுமே பல்வகைத் தன்மையிலான ஒற்றுமையை நாம் நாடாக அடைய முடியும்.

# நாள் 33

*செவ்வாய், 8 செப்டம்பர் 2026*

## *சுயாதீன ஆய்வை வரவேற்பது*

**நீதிமொழிகள் 15:22** ***ஐ வாசிக்கவும்***

“ஆலோசனை இல்லாததால் திட்டங்கள் தோல்வியடைகின்றன் பல ஆலோசகர்கள் இருப்பினால் அவை வெற்றி பெறுகின்றன.”

தாழ்மையானது தனிப்பட்ட ஜெபத்தில் மட்டுமல்ல பிறர் நம்மை ஆய்வு செய்ய அனுமதிக்கும் மனப்பான்மையிலும் வெளிப்படும். அந்த கடினமான காலத்தில், என்னை எதிர்த்து எழுப்பப்பட்ட கவலைகளை பரிசீலிக்க மரியாதைக்குரிய, பாகுபாடற்ற சில ஊழியர்களை நான் அழைத்தேன். இது முடிவை நான் கட்டுப்படுத்தாமல், கிறிஸ்துவின் விசாலமான சபையின் மூலம் தேவன் பேசுவார் என்று நம்புவதைக் குறித்ததாகும்.

இத்தகைய திறந்த மனப்பான்மை எளிதல்ல. அது பெருமையையும் “நான் சரி” என்று நிரூபிக்க வேண்டிய தேவையையும் ஒப்புக்கொடுக்க வேண்டும். ஆனால் இது தெளிவாகச் சொல்கிறது: “நான் கிறிஸ்துவின் சபைக்குச் சேர்ந்தவன் அவருடைய மக்கள் என்னுடன் சேர்ந்து விவேகிக்க நான் நம்புகிறேன்.” இந்த தாழ்மையான அணுகுமுறை, தனிப்பட்ட தற்காப்பை விட அதிகமான தெளிவையும் குணமடைவையும் கொண்டுவரும்.

**சிந்தித்து பாருங்கள்:**

பதட்டங்கள் எழும்பும் போது, நாமோ அல்லது நமது திருச்சபையோ ஞானமுள்ள சுயாதீன ஆலோசனையை வரவேற்க எவ்வளவு தயாராக இருக்கிறோம்?

## *இன்றைய ஜெபம்*

1. கர்த்தாவே, ஒவ்வொரு தலைவருக்கும் பொறுப்புணர்வை ஏற்க தைரியம் அளியுங்கள். தவறாக புரிந்துகொள்ளப்படுவதைக் காட்டிலும் உம்மைப் பயப்பட நாம் கற்றுக்கொள்ளட்டும்.

2. மலேசிய திருச்சபைகள் ஆரோக்கியமான, வெளிப்படையான ஆலோசனை கலாச்சாரத்தை உருவாக்கி, நம்பிக்கையும் ஒற்றுமையும் வலுப்பெற ஜெபிப்போம்.

3. ஒன்றுபட்ட அரசாங்கம் நேர்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் நீதி ஆகியவற்றை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம். அதிகாரங்கள் தேவனால் நிறுவப்பட்டவை என்பதை நினைவில் கொண்டு, நாட்டிற்காக தொடர்ந்து ஜெபிப்போம்.

# நாள் 34

புதன், 9 செப்டம்பர் 2026

## *திருச்சபை நடைமுறைக்கும் தலைமைக்கும் கீழ்ப்படிதல்*

**எபிரெயர் 13:17** ***ஐ வாசிக்கவும்***

“உங்கள் தலைவர்கள்மேல் நம்பிக்கை வைத்து, அவர்களின் அதிகாரத்திற்கு கீழ்ப்படியுங்கள் அவர்கள் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாய் உங்கள் ஆத்துமாக்களை கவனித்து வருகின்றனர்.”

தாழ்மை அதன் முழுமையான வெளிப்பாட்டை அடைவது, தேவன் தனது திருச்சபையில் ஏற்படுத்திய அமைப்புகளையும் நடைமுறைகளையும் நாம் மதிக்கும் போது தான், அது நமக்கு கடினமாக இருந்தாலும். நான் எதிர்கொண்ட கருத்து வேறுபாட்டில், அந்த விஷயத்தை விரிவான சபையிடமும் அதன் நடைமுறைகளிடமும் ஒப்படைத்தேன்.

இறுதி முடிவு என் விருப்பப்படி இருக்காமல் போகலாம் என்றாலும், கிறிஸ்துவே திருச்சபையின் தலை எந்த ஒருவரும் அவருடைய உடலைவிட உயர்ந்தவர் அல்ல என்பதை இது உறுதிப்படுத்தியது.

இத்தகைய கீழ்ப்படிதல் பிரிவினையைத் தடுக்கிறது, தனிப்பட்ட நோக்கங்கள் மேலோங்குவதைத் கட்டுப்படுத்துகிறது, மேலும் கிறிஸ்துவின் கீழ் நாம் ஒருவருக்கொருவர் சேர்ந்தவர்கள் என்பதை உலகிற்கு சாட்சியமாக காட்டுகிறது.

**சிந்தித்து பாருங்கள்:**

உங்கள் வாழ்க்கையிலோ அல்லது திருச்சபை உறவிலோ சரியான நடைமுறைகளை ஏற்க பெருமை தடையாக இருக்கிறதா? தாழ்மையான கீழ்ப்படிதல் எவ்வாறு குணமளிக்க முடியும்?

## *இன்றைய ஜெபம்*

1. கர்த்தராகிய இயேசுவே, உமது திருச்சபைக்கு நீர் கொடுத்த நடைமுறைகளை, அது எங்கள் இருதயத்தை சோதித்தாலும், மதித்து நடக்க கற்றுக்கொடுங்கள்.

2. மலேசிய விசுவாசிகளிடையே ஒற்றுமையும் பரஸ்பர கீழ்ப்படிதலும் வளரட்டும் ஒவ்வொரு திருச்சபையும் மற்றும் பிரிவும் கிறிஸ்துவின் தாழ்மையையும் சமாதானத்தையும் பிரதிபலிக்க ஜெபிப்போம்.

3. மதங்களுக்கு இடையேயான தலைவர்கள் நேர்மையுடனும் பொறுப்புடனும் நடந்து, ஒழுக்கக் குறைவுகளில் வழிநடத்தாமல் இருக்க ஜெபிப்போம்.

# *நமது ஆவிக்குரிய ஏழ்மையை உணருதல்*

**மத்தேயு 5:3** ***ஐ வாசிக்கவும்***

”ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் பரலோகராஜ்யம் அவர்களுடையது”

வேதாகமம் தாழ்மையை மென்மை, தாழ்மை மற்றும் சுயமின்மை என்று விவரிக்கிறது. கொலோசெயர் 3:12 உள்ளிட்ட பகுதிகளில் “தாழ்மை” என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்கச் சொல் “மனதின் தாழ்மை” என்று பொருள்படும். ஆகவே தாழ்மை என்பது வெளிப்புற நடத்தை அல்ல் அது இருதயத்தின் மனப்பான்மை. வெளிப்படையாக தாழ்மையாக தோன்றினாலும், உள்ளத்தில் பெருமையும் அகந்தையும் இருக்கலாம்.

“ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் பரலோகராஜ்யம் அவர்களுடையது” என்று இயேசு சொன்னார் (மத்தேயு 5:3). ஆவியில் ஏழைகள் என்பது, தம்மிடம் ஆவிக்குறிய மதிப்பு எதுவும் இல்லை என்று முழுமையாக உணரும் மனப்பான்மை. இப்படிப்பட்டவர்களே நித்திய ஜீவனை பெறுவர். ஆகையால் தாழ்மை கிறிஸ்தவர்களுக்கு அவசியமானது.

பாவிகளாக கிறிஸ்துவிடம் வரும்போது, தாழ்மையுடன் வர வேண்டும். அவருக்குக் கொடுக்க எதுவுமில்லாத பிச்சைக்காரர்களைப் போல, நம்முடைய பாவமும் இரட்சிப்புக்கான தேவையும் மட்டுமே கொண்டு வருகிறோம். நம்மிடம் எந்தத் தகுதியும் இல்லை, நம்மால் நம்மை இரட்சிக்க முடியாது என்பதையும் ஒப்புக்கொள்கிறோம். அவர் தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் அளிக்கும் போது, அதை தாழ்மையான நன்றியுடன் ஏற்றுக்கொண்டு, நம் வாழ்க்கையை அவருக்கும் பிறருக்கும் அர்ப்பணிக்கிறோம்.

நாம் “சுயத்திற்கு மரித்து”, கிறிஸ்துவில் புதிய படைப்புகளாக வாழ்கிறோம் (2 கொரிந்தியர் 5:17). அவர் நமது தகுதியின்மையை தமது அளவற்ற தகுதியுடன் மாற்றி, நமது பாவத்தை தமது நீதியால் மாற்றினார் என்பதை மறக்கமாட்டோம். இப்போது நாம் வாழும் வாழ்க்கை, நம்மை நேசித்து தம்மையே கொடுத்த தேவனுடைய குமாரனை நம்பி வாழும் விசுவாசத்தின் வாழ்க்கையாகும் (கலாத்தியர் 2:20). இதுவே உண்மையான தாழ்மையாகும்.

## *இன்றைய ஜெபம்*

1. நாம் செய்யும் அனைத்திலும் தேவனை முதன்மைப்படுத்தி, தாழ்மையான இருதயத்துடன் அவரை சேவிக்க ஜெபிப்போம்.

2. தாழ்மையின் மூலம் ஆழமான கூட்டிணைவு உருவாகட்டும். திருச்சபை ஒரே சமுதாயமாக, முழு தாழ்மையுடன் தேவனை ஆராதித்து, நம்முடைய பாதையை நடத்துகிறவராக அவரை நம்ப ஜெபிப்போம்.

3. மெர்டேகாவின் 70 ஆண்டுகளை நெருங்கும் நமது நாடு, ஒற்றுமையில் வளர்ந்து, குறைவானவர்களுடனும் புறக்கணிக்கப்பட்டவர்களுடனும் வளங்களைப் பகிரும் மனம் பெற ஜெபிப்போம்

## *தேவனுடைய அழைப்பிற்கு கீழ்ப்படிதல்*

***2 கொரிந்தியர் 7:14 வாசிக்கவும்***

“என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்.”

நம்மைச் சுற்றியுள்ள உலகம் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் மத துறைகளில் பல மாற்றங்களையும் கலக்கங்களையும் அனுபவிக்கிறது. திருச்சபையாகிய நாம், எல்லா சூழ்நிலைகளிலும் மாற்றத்தை கொண்டு வர தேவன் வல்லவர் என்பதை நம்புகிறோம். அனைத்து கிறிஸ்தவர்களும் தாழ்மையான மனப்பான்மையுடன் தேவனை அணுக அழைக்கப்படுகிறார்கள்.

திருச்சபையின் அழைப்பு, நாம் ஒன்றிணைந்து தாழ்மையுடன் தேவனுக்கு முன் மண்டியிட்டு முழுமையான ஒப்புக்கொடுத்தலை வெளிப்படுத்துவதாகும். கூட்டாகச் செய்யப்படும் ஜெபத்தின் மூலம், மனித வலிமையை அல்ல, தேவனை முழுமையாகச் சார்ந்திருப்பதை திருச்சபை ஒப்புக்கொள்கிறது. இந்த கீழ்ப்படிதல், கிறிஸ்துவுக்கும் தேவனாகிய பிதாவுக்கும் இடையிலான உறவின் அழகான படிமமாக இருந்து, திருச்சபை பின்பற்ற வேண்டிய சிறந்த முன்மாதிரியாகும்.

தேவனுடைய மக்கள் தாழ்மையுடன் ஒன்றுபடும் போது, தேவன் செயல்பட்டு திருச்சபையை மீட்டெடுத்து, அதன் திசையை வழிநடத்துகிறார். “கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்” (துயஅநள 4:10)

## *இன்றைய ஜெபம்*

1. உள்ளூர் திருச்சபை வளர்ந்து, பரிசுத்த ஆவி நிரம்பிய சன்னிதியாய் மாற ஜெபிப்போம்.

2. யோவான் 17:21ல் இயேசு ஜெபித்தபடி, திருச்சபை ஒன்றுபட்டு, பரிசுத்த ஆவியின் சன்னிதியுடன் கிறிஸ்துவில் ஒரே சரீரமாக இருக்க ஜெபிப்போம்.

3. ஒரு நாட்டின் மக்களின் நடத்தை அதன் நேர்மையையும் நலனையும் காட்டுகிறது. 2026 “விசிட் மலேசியா” ஆண்டாக இருப்பதால், “மலேசியா, துருலி ஆசியா” என்ற வாசகத்தை வருகையாளர்களுக்கு நினைவாக மாற்ற நாம் ஒன்றிணைந்து செயல்பட ஜெபிப்போம்.

# *திருச்சபையின் மூலம் தேவனுடைய அதிகாரத்திற்கு தாழ்மை*

**பிலிப்பியர் 2:5-8 *வாசிக்கவும்***

திருச்சபை கிறிஸ்துவின் உடலாகவும் உலகத்திற்கு கிறிஸ்துவை வெளிப்படுத்தும் சாட்சியாகவும் உள்ளது. தேவனுடைய குமாரனாகிய ஆண்டவர் இயேசு தம்முடைய பரலோக மகிமையைத் தாழ்த்தி விட்டு, தம்மையே தாழ்மையாக்கிக்கொள்ளத் தயாராயிருந்ததால் தான் திருச்சபை நிறுவப்பட்டது. பிலிப்பியர் 2 ஆம் அதிகாரம் இப்படிச் சொல்லுகிறது: "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாக இருப்பதைப் பற்றிக்கொள்ளத்தக்கதாக எண்ணாமல், தம்மையே வெறுமையாக்கி, அவரின் ரூபம் எடுத்து, மனிதர்களின் சாயலில் தோன்றினார். மனிதராக வெளிப்பட்ட அவர் தம்மைத்தாமே தாழ்த்தி, மரணமட்டும் கீழ்ப்படிந்தார் சிலுவை மரணமட்டும் கீழ்ப்படிந்தார்." (பிலிப்பியர் 2:5–8)

கிறிஸ்துவின் தாழ்மையும் கீழ்ப்படிதலும் அவருடைய திருச்சபையின் அடித்தளமாக அமைந்தது் இதையே உலகிற்கு வெளிப்படுத்தும்படி அவர் எதிர்பார்க்கிறார். தேவனுடைய ஜனங்கள் "சுயநல ஆசையினாலோ வீண்பெருமையினாலோ எதையும் செய்யாமல், தாழ்மையான மனதோடு பிறரைத் தங்களைவிட உயர்ந்தவர்களாக எண்ணுங்கள் கிறிஸ்து இயேசுவின் மனப்பான்மையே உங்களிலும் இருக்கட்டும்" என்று நினைவூட்டப்படுகிறார்கள் (பிலிப்பியர் 2:3).

புதிய ஏற்பாட்டில், ஆண்டவர் தமது ஜனங்களுக்கு அளிக்கும் அழைப்பு தெளிவாக உள்ளது: அவர்கள் சீடர்களாகவும் சேவகர்களாகவும் வாழ வேண்டும் (லூக்கா 14:26–27 மார்கு 10:43–45). ஆண்டவர் இப்படிச் சொன்னார்: "உங்களுக்குள் அப்படியிருக்கக்கூடாது உங்களில் பெரியவனாக இருக்க விரும்புகிறவன் உங்களுக்குச் சேவகராயிருக்க வேண்டும். உங்களில் முதலாவனாக இருக்க விரும்புகிறவன் எல்லாருக்கும் அடியனாக இருக்க வேண்டும். மனுஷகுமாரனும் சேவைக்குப் பெற வராமல், சேவை செய்யவும், பலருக்காகத் தன் உயிரை மீட்புக்காசாகக் கொடுக்கவும் வந்தார்." (மார்கு 10:43–45)

சேவகத்தன்மை தாழ்மையின் அடையாளமாகும் அது நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இயல்பையும் குணத்தையும் வெளிப்படுத்துகிறது. அன்பிலும் இரக்கத்திலும் தாழ்மையிலும் அவரைப்போல் ஆகுவது திருச்சபைக்கு ஆண்டவர் அளித்த முக்கியமான அழைப்பாகும். அவருடைய ஜனங்களாகிய நாம், உலகத்திற்கு அவருடைய குணத்தையும் சேவை இருதயத்தையும் எவ்வளவு நெருக்கமாக பிரதிபலிக்கிறோமோ அதன்படி நமது ஆவிக்குரிய வாழ்க்கை அளவிடப்படுகிறது.

## *இன்றைய ஜெபம்*

1. பிறருக்கு சேவை செய்யும் இருதயமும் இரக்கமும் நம்முள் உருவாகும்படி, நமது உள்ள மனிதன் மாற்றப்பட ஜெபிப்போம். உலகத்திற்கு கிறிஸ்துவை சாட்சியாக அறிவிக்கத் துணிவும் தீவிரமும் நமக்குக் கிடைக்க ஜெபிப்போம்.

2. தேவனுக்கு நெருங்கும் பயணத்தில் ஒவ்வொருவரும் வேறுபட்டவர்களாக இருப்பதால், ஒப்பீடு இருக்காதபடி ஜெபிப்போம். நாம் அவருடைய சித்தத்தோடு ஒத்திசைந்து, ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் திட்டமிட்ட இலக்கை அடைய உதவி கிடைக்க ஜெபிப்போம்.

3. மலேசியாவில் நல்ல ஜனநாயக ஆட்சி நிலைநிறுத்தப்படுவதற்காக, அரசாங்கத்தை பொறுப்புக்கூறச் செய்து, அரசியலமைப்பு மற்றும் நாட்டின் சட்டங்களுக்கு ஏற்ப கண்காணிக்கும் எதிர்க்கட்சிகளுக்காக ஜெபிப்போம்.



# முடிவு

## நாள் 38–40

# *தாழ்மையோடு நம் தேவனோடு நடப்பது*

**மீகா 6:8** ***ஐ வாசிக்கவும்***

“மனுஷனே, நன்மையானது என்ன என்பதை அவர் உனக்குக் காட்டியிருக்கிறார்... உன் தேவனோடே தாழ்மையோடு நடப்பது.”

நாம் கடந்த 40 நாள் உபவாசமும் ஜெபமும் என்ற பயணத்தை திரும்பிப் பார்க்கும் போது, கர்த்தர் நம்முள் அமைதியாக செய்து கொண்டிருந்த மாற்றங்களை உணர முடிகிறது. இந்தப் பயணம் உபவாசத்துடன் முடிந்துவிட வேண்டியதல்ல் அது நம்மை வாழ்நாள் முழுவதும் தேவனின் முன் தாழ்மையோடு நடக்கச் செய்யும் ஒரு புதிய மனப்பான்மையை உருவாக்குவதற்காகவே ஆகும். மீகா 6:8 நமக்கான தொடர்ந்த அழைப்பாக இருக்கிறது — வெறும் மதச் செயல்களில் மட்டுமே நின்றுவிடாமல், தினசரி வாழ்க்கையில் நீதியையும் இரக்கத்தையும் தாழ்மையையும் வெளிப்படுத்தி வாழ அழைக்கிறது.

உபவாசம் நம்முடைய ஆசைகளை அமைதிப்படுத்தி, நம்முடைய இருதயங்களை சரியான பாதையில் திருப்பியுள்ளது. அது நமக்கு நினைவூட்டுவது — உண்மையான தாழ்மை பலவீனம் அல்ல் அது தேவனில் சார்ந்திருக்கும் வலிமை. வேதாகமம் கூறுகிறது: “தேவன் அகந்தையுள்ளவர்களுக்கு எதிராக நின்று, தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார்” (யாக்கோபு 4:6). இந்த நாட்களில் உண்மையான வெற்றி என்னவென்றால், நாம் எதைத் தவிர்த்தோம் என்பதல்ல் மாறாக, நம்முடைய இருதயம் தேவனை அறிந்து கொள்ளும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டதா என்பதே (தானியேல் 11:32), மேலும் தினசரி சோதனைகளை எதிர்கொள்ள வலிமை பெற்றோமா என்பதே (உபாகமம் 8:3).

தேவன் இஸ்ரவேலரை உடலுக்கான உணவு மட்டும் போதாது என்பதை காட்டுவதற்காக பசியின் வழியாக நடத்தினார். அவருடைய வார்த்தையே நமக்கு உண்மையான வலிமையை அளித்து, தினசரி சோதனைகளை ஜெயிக்க உதவுகிறது என்பதை அவர் அவர்களுக்கும் நமக்கும் கற்றுக்கொடுத்தார். அவருடைய வார்த்தை நம்முடைய ஆவிக்குரிய நிலையை நிலையாகவும் உறுதியானதாகவும் உடல், மனம், உணர்ச்சி மாற்றங்களைக் கடந்தும் வைத்திருக்கிறது.

ஆகையால், தினமும் ஒழுக்கத்துடன் வேதாகமத்தை வாசிப்பது நமது முன்னுரிமையாக இருக்க வேண்டும். ஒரு எளிய நினைவூட்டல்:

NBNB (வேதாகமம் இல்லை – காலை உணவும் இல்லை)

NSNS (வேதாகமம் இல்லை – உறக்கமும் இல்லை)

இயேசு கிறிஸ்து நமக்கு சிறந்த எடுத்துக்காட்டு. அவர் முழுமையாக தேவன் ஆனாலும், "தம்மைத் தாழ்த்திக் கொண்டு, மரணத்திற்கும் கீழ்ப்படிந்தார் — சிலுவை மரணத்திற்கும் கூட" (பிலிப்பியர் 2:6–8). கிறிஸ்துவைப் பின்பற்றுகிற நாமும், அவருடைய தாழ்மையை நம்முடைய முடிவுகளில், சேவையில், உறவுகளில் காட்ட அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இயேசு தாமே சொல்கிறார்: "என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் நான் சாந்தமும் தாழ்மையான இருதயமுள்ளவன்" (மத்தேயு 11:29).

உபவாசம் முடிந்தாலும், தாழ்மை தொடரட்டும். தேவனுடைய வார்த்தை நம்முடைய தினசரி ஆதாரமாக இருந்து, அகந்தையிலிருந்து நம்மைக் காத்து, நம்முடைய நடை அவருடைய சத்தியத்தோடு ஒத்திசைக்கட்டும் (உபாகமம் 17:19–20).

இந்த 40 நாட்களில் கற்றுக்கொண்ட பாடங்கள், வரவிருக்கும் நாட்களையும் வடிவமைத்து, கீழ்ப்படிதல், ஒற்றுமை, அமைதியான விசுவாசம் ஆகியவற்றை உருவாக்கட்டும்.

## *இறுதி ஜெப அறிவிப்பு*

கர்த்தாவே, உம் முன் எங்களைத் தாழ்த்திக்கொள்கிறோம். இந்த பரிசுத்தமான காலத்தில் எங்களைச் சந்தித்ததற்காக நன்றி. கிறிஸ்துவின் இருதயத்தைப் போல — கீழ்ப்படிதலுள்ள, ஒப்புக்கொடுத்த, விசுவாசமான இருதயத்தை எங்களுள் உருவாக்கும். நாங்கள் முன்னே செல்லும் போது, உம்மோடு தாழ்மையோடு நடந்து, பிறருக்குச் சேவை செய்து, எங்களால் செய்யப்படும் எல்லாவற்றிலும் உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும்படி கிருபை தாரும். ஆமேன்.

## *தாழ்மையின் நிலையான பலன்*

**எரேமியா 9:23–24, 1 யோவான் 2:15–16** *ஐ வாசிக்கவும்*

**40 நாள் பயணத்திற்கான இறுதி தியானம்**

இந்த 40 நாள் உபவாசமும் ஜெபமும் முடிவடையும் வேளையில், கர்த்தர் நம்முடைய இருதயங்களை உண்மையில் முக்கியமானவற்றில் மெதுவாக மீண்டும் நிலைநிறுத்துகிறார்.

“ஞானி தன் ஞானத்தில் பெருமை கொள்ளாதிருப்பான் வல்லவன் தன் வல்லமையில் பெருமை கொள்ளாதிருப்பான்… ஆனால் பெருமை கொள்ளுகிறவன் இதிலே பெருமை கொள்ளட்டும் — அவன் என்னை அறிந்திருக்கிறான்” (எரேமியா 9:23–24). தாழ்மை நம்முடைய கவனத்தை நம்முடைய சாதனைகளிலிருந்து மாற்றி, மிகப்பெரிய பலனான கர்த்தரை அறிந்து, அவருடைய வழிகளில் மகிழ்வதற்குத் திருப்புகிறது.

தாழ்மையின் பலன் தேவனோடு நெருக்கமான உறவு. நாம் அகந்தையை விட்டு விலகும்போது, நம்முடைய இருதயம் மென்மையாகி, கற்றுக்கொள்ளத் தயாராகி, அவருடைய குரலுக்குப் பதிலளிக்கக்கூடியதாக மாறுகிறது. ஆனால் வேதாகமம் தினமும் நம்மைத் தாழ்மையிலிருந்து விலக்கக்கூடிய இடையூறுகளையும் எச்சரிக்கிறது:

“மாம்சத்தின் ஆசை, கண்களின் ஆசை, வாழ்க்கையின் அகந்தை” (1 யோவான் 2:15–16). இவை நம்முடைய அன்பைப் பிடிக்க முயன்று, மெதுவாக நம்மை சுயநம்பிக்கை, ஒப்பீடு, தவறான நம்பிக்கை ஆகியவற்றிற்குள் இழுத்து, தேவனிலிருந்து நம்முடைய நம்பிக்கையை மாற்றுகின்றன.

அதனால் தாழ்மையை நாம் விழிப்புடன் காக்க வேண்டும். அது உபவாசம் அல்லது ஆவிக்குறிய அனுபவங்களால் மட்டும் நிலைத்திருக்காது தேவனுடைய வார்த்தையில் நிலைத்த நம்பிக்கையாலும் ஒழுக்கமான வாழ்க்கையாலும் தான் நிலைக்கும். மனிதர்கள் நம்மை ஆதரிக்காத போதும், நம்முடைய வலிமை குறைந்ததாக உணரும்போதும், கர்த்தர் விசுவாசமாக இருக்கிறார். பவுலின் சாட்சியம் நமக்கு நினைவூட்டுகிறது:

“என் முதல் விசாரணையில் யாரும் என்னோடு நிற்கவில்லை… ஆனால் கர்த்தர் என்னோடு நின்றார்” (2 தீமோத்தேயு 4:16). சூழ்நிலைகளும் மனிதர்களும் நம்மைத் தளர்த்தினாலும், தேவனுடைய சந்நிதியும் சத்தியமும் நம்மை நிலைநிறுத்துகிறது. ஆகையால், நம்முடைய ஆத்துமாவை தினமும் அவருடைய வார்த்தையால் போஷிக்கத் தொடர்வோம். தாழ்மையில், நாம் நம்முடைய நடைப்பாதைக்கு தெளிவையும், தொடர்ந்து செல்ல வலிமையையும், கர்த்தரை அறிந்திருக்கும் ஆழ்ந்த சந்தோஷத்தையும் கண்டடைகிறோம்.

**ஒரு நடைமுறை படி:**

ஒவ்வொரு நாளும் ஒரு நிரந்தரமான நேரத்தை ஒதுக்கி, தேவனுடைய வார்த்தையை வாசித்து தியானியுங்கள். அது நாள் முழுவதையும் வடிவமைக்கட்டும்.

## *ஜெப அறிவிப்பு*

கர்த்தாவே, உம்மை அறிந்திருப்பதிலே மட்டுமே நாம் பெருமை கொள்கிறோம். உலக ஆசைகளிலிருந்தும் வாழ்க்கையின் அகந்தையிலிருந்தும் எங்கள் இருதயங்களை காக்கும். உமது வார்த்தையில் ஆழமாக வேரூன்றி, தாழ்மையுடன், விசுவாசமாக, நிலைத்திருப்பவர்களாக எங்களை நிலைநிறுத்தும். எங்களுள் கற்றுக்கொள்ளும் மனப்பான்மையை உருவாக்கும் — மனந்திரும்ப வலிமை உடையவர்களாகவும், “நான் உங்களை புண்படுத்தினேன், மன்னிக்கவும்” என்று மென்மையாக சொல்லக்கூடியவர்களாகவும், சமாதானத்திலும் சமரசத்திலும் நடக்கத் தயாராக இருப்பவர்களாகவும் மாற்றும். எங்கள் வாழ்க்கை பரிசுத்த ஆவியின் கனிகளை வெளிப்படுத்தி, உமது நாமத்திற்கு மகிமையைக் கொடுக்கட்டும். உமது வார்த்தை சொல்லும் போல:

“சமாதானத்தின் தேவன் விரைவில் சாத்தானை உங்கள் கால்களின் கீழ் நசுக்கும்.” எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை எப்போதும் எங்களோடு இருப்பதாக.

ஆமேன்.

## *மலேசியா தின அறிவிப்பு*

**சங்கீதம் 24, தானியேல் 9** ***ஐ வாசிக்கவும்***

**40 நாள் பயணத்திற்கான இறுதி தியானம்**

நாம் தாழ்மையுடன் கர்த்தரின் கிருபை சிங்காசனத்திற்குள் நுழைவோம். அவருடைய ராஜ்யம் நம் நாட்டில் வரும்படி அதிகாரம் உடைய "பண்டையவராகிய தேவனின்" முன்னிலையில் வருவோம். தானியேல் 9-ல் உள்ள ஜெபம் ஒரு வெற்றிக்கான மாதிரியாக உள்ளது.

அது வானத்தின் சக்திகளை இயக்கி, தேவதூதர் தலையீட்டின் மூலம் இஸ்ரவேலுக்கான தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறச் செய்தது. தானியேலின் வாழ்க்கை உண்மையான தாழ்மையும் முழுமையான கீழ்ப்படிதலுமாக இருந்தது. அவர் வாழ்க்கை: அர்ப்பணிப்பு, கீழ்ப்படிதல், தேவனை சார்ந்திருத்தல், பொறுமை, நிலைத்திருத்தல். அவரின் ஜெப வாழ்க்கை தாழ்மையாலும் தேவனை அறிந்த அறிவாலும் நிரம்பியிருந்தது. 2027-ல் 70 ஆண்டுகள் சுதந்திரத்தை நோக்கி நாம் தயாராகும் இந்த நேரத்தில், இதே இருதயத்தின் ஏக்கம் நமக்குள் இருக்கட்டும்.

மலேசியாவுக்கான தேவனின் தீர்மானிக்கப்பட்ட நேரத்தில் நாம் நுழையும் போது, நாம் தீவிரமான ஜெபத்தில் நம்மை அர்ப்பணித்து, இந்தக் கொள்கைகளையும் மனப்பான்மைகளையும் நடைமுறைப்படுத்துவோம்.

அதன் மூலம் தேவனுடைய திட்டங்கள் நம் நாட்டில் நிறைவேறட்டும். இந்த மலேசியா தினத்தில், நாம் "பண்டையவராகிய தேவனை" வரவேற்று, சங்கீதம் 24:1-2, 7-10 ஐ அறிவிப்போம்:

"பூமி கர்த்தருடையது, அதில் உள்ள அனைத்தும் அவருடையது உலகமும் அதில் வாசிக்கும் அனைவரும் அவருடையவர்கள் அவர் அதை கடல்களின் மேல் நிறுவி, நீரின் மேல் நிலைநிறுத்தினார்."

## *நாம் அறிவிக்கிறோம்:*

**மலேசியா கர்த்தருடையது, அதின் முழுமையும் அவருடையது!**

இந்த தேசமும் அதில் வாழும் அனைத்து மக்களும் அவருடையவர்கள்! உமது பரமாதிகாரத்தினால், இந்த தேசத்தையும் எல்லா மக்களையும் நிறுவினீர்! நாங்கள் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம்! எல்லா நாமங்களுக்கும் மேலான உமது நாமத்தை உயர்த்தி மகிமைப்படுத்துகிறோம்! நீர் ஒருவரே ஸ்தோத்திரத்திற்கு உரியவர்!

**செமனஞ்சுங், சபா, சரவாக் ஆகிய அனைத்து மாநிலங்களின்மேலும் நாம் அறிவிக்கிறோம்:**

வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்!
நித்திய கதவுகளே, உயர்த்தப்படுங்கள்!

மகிமையின் ராஜா உள்ளே வருவார்! இந்த மகிமையின் ராஜா யார்?

வல்லமையுள்ள கர்த்தர்! போரில் வல்லவரான கர்த்தர்!

வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்! நித்திய கதவுகளே, உயர்த்தப்படுங்கள்!

மகிமையின் ராஜா உள்ளே வருவார்!

இந்த மகிமையின் ராஜா யார்? சேனைகளின் கர்த்தர்! அவரே மகிமையின் ராஜா!

ஆமேன்! ஆமேன்!


NECF
MALAYSIA
MALAYSIA
DAY
Celebration

# நன்றியுரை

## *முன்னுரை*

| | |
|---|---|
| தாழ்மையோடு நடங்கள் | அருட்டிரு. டாக்டர் இயூ ஹொங் செங் |
| ஆவிக்குரிய எழுச்சிக்கு அடிப்படையாகும் தாழ்மை | சங்கை. ஆண்டி சி |
| தேவரின் வல்லமையுள்ள கரத்தின் கீழ் தங்களைத் தாழ்த்துங்கள் | போதகர் சாமுவேல் ஆங் |
| NECF கட்டிட நிதியை ஆதரிக்குங்கள் | மூப்பர் லீ சூங் சான் |

## *ஜெபமும் தியானமும்:*

| | |
|---|---|
| அறிமுகம் | சங்கை. லூயி கோக் கிம் |
| **வாரம் 1**<br>கிறிஸ்துவின் தாழ்மையைப் பின்பற்றுதல் | சங்கை. ஜான் லிம்<br>சங்கை. லீ யூ மேங் |
| **வாரம் 2**<br>தாழ்மையின் பண்புகள் | சங்கை. விக்டர் லீ<br>மூப்பர் டாக்டர் கூ காய் "ஹப் |
| **வாரம் 3**<br>தாழ்மையின் பலன்கள | சங்கை. பாலுஸ் வோங்<br>சங்கை. ∴பூ மோய் பெங் |
| **வாரம் 4**<br>தாழ்மைக்கு இடையூறுகள்<br>சுதந்திர நாள் | சங்கை. எலிஷா சத்விந்தர்<br>ஜெபக் குழு |
| **வாரம் 5**<br>சபையில் தாழ்மையின் வெளிப்பாடு | டாக்டர் ஹென்றி பாடின்<br>சங்கை. டத்துக் ஜெர்ரி டூசிங் |
| முடிவு | சங்கை. லூயி கோக் கிம் |
| மலேசியா தினம் | ஜெபக் குழு |



NECF MALAYSIA

# போதகர்களை கனப்படுத்தும் மாதம்

## அக்டோபர்

வாரம் 1
அவர்களை மிகுந்த மரியாதையுடனும் மதிப்புடனும் நடவுங்கள்
(1 தெசலோனிக்கேயர் 5:12–13)

வாரம் 2
விசுவாசத்தில் எழும்புங்கள்
(எபிரெயர் 13:7)

வாரம் 3
அவர்களுக்காக ஆழமாக எவ்வேளையிலும் ஜெபியுங்கள்
(எபேசியர் 6:18)

வாரம் 4
அவர்கள் செய்யும் ஊழியப் பணியில் அவர்களுடன்
துணைநில்லுங்கள்
(யாத்திராகமம் 17:12)